## அரசு ஊழியர்

ஆகஸ்ட் 2019

மலர் : 40 இதழ் : 8

தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்திற்காக
அச்சிட்டு வெளியிடுபவர் : மு.அன்பரசு

ஆசிரியர் : மு.சுப்பிரமணியன்

ஆசிரியர் குழு

மு.அன்பரசு, எம்.தங்கராஜ், ந.குமாரவேல்,
மொ.ஞானத்தம்பி, இரா.பன்னீர்செல்வம்,
எஸ்.தமிழ்ச்செல்வி, என்.ஜனார்த்தனன், தி.கலைசெல்வி

முகவரி : பழைய எண். 48
புதிய எண் 46, தேரடித் தெரு
திருவல்லிக்கேணி, சென்னை – 600 005.
e-mail : arasuoozhiyar@gmail.com

*அச்சகம்: சென்னை ஆப்செட் பிரிண்டர்ஸ்,
19/1 & 21/2, கிட்டாபாத் கான் பகதூர் தெரு,
எல்லீஸ் ரோடு, அண்ணாசாலை, சென்னை - 600 002.*

*ஆண்டுச் சந்தா : ரூ. 80 தனி இதழ் ரூ. 8*


### சூடா ஒரு கோப்பை சூப்

## கிளிப்பாட்டு

தேசமோ தேசம் என்றே
சிந்திப்பார் போல் நடிப்பார்.
பாசமே பாசாங்கு என்பார் – கிளியே
பாசங்கு செய்வாரடி!

சாதியை மதவெறியை
சாத்திரக் குப்பைகளை
வேதியர் வளர்த்தாரடீ –
கிளியே நீதியை சிதைத்தாரடீ

அந்தமும் ஆதிஇலான்
ஆண்டவன் பிறந்த இடம்
இந்த இடம்தான் எனில் – கிளியே
ஏமாற்று வித்தையடீ!

– நவகவி

# தமிழக அரசின் அலட்சியத்தால் மீண்டும் போராட்டம்

தமிழகத்தில் கடந்த இரண்டு ஆண்டுகளில் அரசு ஊழியர்கள் ஆசிரியர்கள் தங்களின் வாழ்வாதாரக் கோரிக்கைகளுக்காக பல்வேறுகட்ட ஜனநாயக ரீதியிலான போராட்டங்களை நடத்தியும் தமிழக அரசு எந்தவிதமான கோரிக்கைகளையும் நிறைவேற்றாததோடு ஊழியர்களை வீதிகளில் இறங்கி போராடும் நிலைக்கு தள்ளியுள்ளது. தமிழக அரசு போராடுகின்ற அரசு ஊழியர்கள் ஆசிரியர்களை அழைத்து நேரடியாக பேச்சுவார்த்தை நடத்துவதை விட்டுவிட்டு போராடுகின்ற ஊழியர்களை காவல் துறையை வைத்து கடுமையாக நெருக்கடிகளை கொடுத்து வருகின்றது.

அரசு ஊழியர் ஆசிரியர்களின் ஊதிய மாற்றம் செய்வதில் கூட தனது ஊழியர்களின் மீது உணர்வற்ற அரசாங்கம் ஒரு அந்தியரை போல் தன்னை ஆட்கொள்வதும் கண்ணியமற்ற முறையில் பேசுவதும் எக்காலத்திலும் இல்லாமல் இக்காலத்தில் நிகழ்ந்து வருகின்றது.

அதேபோல் தமிழக அரசு தனது அமைச்சர்களை வைத்து தவறான புள்ளி விவரங்களை அதாவது அரசு ஊழியர், ஆசிரியர்களுக்கு ஊதியமாக 75% செலவு செய்யப்படுகிறது என்ற பொய் பிரச்சாரத்தை மேற்கொண்டு நமக்கும் பொதுமக்களுக்குமான இடைவெளியை அதிகரிக்க அரசு முயற்சிக்கிறது.

போராடி பெற்ற உரிமையான ஓய்வூதியத்தை சிக்கன நடவடிக்கை என்ற பெயரில் அழிக்க பார்க்கிறார்கள். ஒடுக்கப்பட்ட மக்கள், பிற்படுத்தப்பட்ட மக்கள் பல லட்சம் பேர் அரசுத் துறையின் பணியில் சேரும் நிலை இன்று 56 அரசாணை மூலம் மறுக்கப்படுகிறது.

தமிழக அரசு நவீனமயம் என்ற பெயரில் கொத்தடிமை கூலியில் தங்களது வாழ்வாதாரத்தை இழந்து நிற்கும் சத்துணவு, அங்கன்வாடி, கிராம உதவியாளர்கள் மற்றும் தொகுப்பூதியம், மதிப்பூதியம் பெறும் ஊழியர்களை அட்டை ரத்தத்தை உறிஞ்சுவது போல் உழைப்புச் சுரண்டலுக்கு ஆளாக்கப்பட்டுள்ளனர்.

மொத்தத்தில் ஜனநாயகத்தின் குரல் வளையை நசுக்கும் கூட்டம் தலை எடுக்க ஆரம்பித்து விட்டது. இவ்வாறான தடைகளை உடைத்தெறிந்து ஜாக்டோஜியோ என்ற ஆகப்பெரிய பேரமைப்பு தமிழகத்தில் அரசு

ஊழியர் ஆசிரியர்களின் நலனுக்காக ஜனநாயகப்பூர்வ மான தொடர் இயக்கங்களை நடத்தியது. அப்போராட்டங் களை ஒடுக்க காவல்துறையை கொண்டு தமிழக அரசு, அடக்குமுறையை கட்டவிழ்த்து விட்டது. அதை எதிர்கொண்டு பல ஆயிரக்கணக்கான அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள் தமிழகம் முழுவதும் சிறை சென்றார்கள். அதில் 5068 பேர் 17 பி குற்றச்சாட்டுகளுக்கும், 1600 பேர் பணி மாறுதல்களுக்கும் உட்படுத்தப்பட்டார்கள். ஆனாலும், தமிழக அரசு குறைந்தபட்சம் பேச்சுவார்த்தை நடத்தக்கூட முன்வரவில்லை. இருப்பினும் 22.1.2019 முதல் தொடர் காலவரையற்ற வேலை நிறுத்தம் நடந்து கொண்டு இருந்தது.

அப்பொழுதுதான் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் பத்திரிகை செய்தியின் வாயிலாக பணிக்குத் திரும்புங்கள் என்ற வேண்டுகோளை ஏற்றுக்கொண்ட ஜாக்டோஜியோ கூட்டமைப்பு வரவேற்றும், எதிர்காலத்தில் நமது கோரிக்கைகள் நிறைவேற்றப்படும் என்ற நல்லெண்ணத்தின் அடிப்படையிலும், மக்கள் நலன் பேணவும், மாணவர்கள் நலன் கருதியும் காலவரையற்ற வேலை நிறுத்தப் போராட்டத்தினை தற்காலிகமாக 30.1.2019 உடன் முடித்துக் கொண்டு பணிக்குத் திரும்புவது என முடிவெடுத்து அனைவரும் பணியில் சேர்ந்தோம்.

இருந்தபோதும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் வேண்டுகோளை ஏற்று பணிக்கு திரும்பிய ஆசிரியர்கள் மற்றும் அரசு ஊழியர்கள் மீது குற்றச்சாட்டுகள், பணி மாறுதல்கள், பதவி உயர்வுகள் மறுக்கப்படும் நிலை தொடர்ந்து கொண்டு தான் இருக்கிறது.


இதையெல்லாம் போக்குகின்ற வகையில் ஜாக்டோ ஜியோ பேரமைப்பு அரசுடன் நல்லுறவை ஏற்படுத்து கின்ற வகையில், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் கவனத்தை ஈர்க்கின்ற வகையில் மாநிலம் தழுவிய அளவில் மாபெரும் உண்ணாவிர போராட்டத்தை கடந்த 7.7.2019 அன்று ஆயிரக்கணக்கான ஊழியர்களின் பங்கேற்புடன் நடைபெற்றது. அதன் பின்பும் தமிழக அரசு பழிவாங்கும் நடவடிக்கைகளை கைவிடவில்லை. மேலும் ஜாக்டோஜியோ ஒருங்கிணைப் பாளர்களை நேரடியாக அழைத்து பேசவுமில்லை. அதனைத் தொடர்ந்து ஜாக்டோஜியோ ஒருங்கிணைப் பாளர்கள் 16.7.2019 அன்று மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களை நேரடியாக சந்தித்து 9 அம்ச கோரிக்கையுடன் முன்னாள் மாநிலத் தலைவர் மு.சுப்பிரமணியன் ஓய்வு பெறும் நாளில் தற்காலிக பணி நீக்கம் செய்யப்பட்டதை ரத்து செய்தல் என்ற கோரிக்கையும் சேர்த்து பேச முடிவு செய்தோம். அந்நாளில் சட்டமன்றம் நடந்து கொண்டு இருந்ததால் தமிழக அரசிடம் இருந்து ஜாக்டோஜியோ ஒருங்கிணைப் பாளர்களை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் சந்திக்க நேரமில்லை எனவும், எனவே அரசு நிர்வாக சீர்திருத்தத் துறை செயலாளர் அவர்களை சந்தித்து முறையீடு செய்யுங்கள் எனக் கூறி காவல் துறை வாகனத்தில் அரசு ஊழியர்கள் சங்கத்தில் இருந்து ஜாக்டோஜியோ ஒருங்கிணைப்பாளர்களை அழைத்துக் கொண்டு சென்றார்கள். அங்கு அரசு முதன்மை செயலாளர் அவர்களை சந்தித்து கோரிக்கை மனு அளிக்கப்பட்டு பேச்சுவார்த்தை நடத்தப்பட்டது. அவர் 17 பி குற்றச்சாட்டுகள் அனைத்தும் ரத்து செய்வதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்றும், சட்டமன்ற கூட்டம் முடிந்தவுடன் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் ஜாக்டோஜியோ நிர்வாகிகளுடன் பேச்சுவார்த்தை நடத்துவதற்கு உரிய தேதி வாங்கித் தருவதாக உறுதியளித்தார். எனவே, நம்பிக்கையுடன் திரும்பினோம்.

அதன் தொடர்ச்சியான காவல் துறை தலைவர் அவர்களை சந்தித்து கடந்த இரண்டு மாதங்களாக ஆசிரியர் அரசு ஊழியர் சங்க நிர்வாகிகள் குறித்து உளவுத் துறையின் மூலம் வருகை பதிவேடு நகல்கள் வாங்குவதை தெரிவித்து அதை உடன் தலையிட்டு தடுத்து நிறுத்த வேண்டும் என்று கோரிக்கை வைத்தோம். அவருடன் உடன் தலையிட்டு நடவடிக்கை எடுக்கப்படும் என உறுதியளித்தார்.

மேற்கண்ட நடவடிக்கைகளை அரசு மேற்கொண்டால் எங்களது நியாயமான கோரிக்கைகளை நேரடி பேச்சுவார்த்தை மூலம்தான் தீர்வு காண முடியும் என்பதை தமிழக அரசு புரிந்து கொள்ள வேண்டும்.

ஒரு நல்ல அரசு, போராடும் ஜாக்டோஜியோ நிர்வாகிகளை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் நேரடியாக அழைத்து பேசி பிரச்சனைகளை தீர்க்க வேண்டும் என விரும்புகிறோம். இல்லையென்றால் வருகின்ற செப்டம்பர் 2019ல் தஞ்சாவூரில் நடைபெறும் எங்கள் சங்க 13வது மாநில மாநாட்டில் மிகப்பெரிய போராட்டத்தை மீண்டும் அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள் நடத்த வேண்டிய கட்டாயத்திற்கு தள்ளப்படுவோம். ❖

# தீண்டாமை எனும் தீட்டு கழிப்போம்!
# சாதியம் எனும் சாக்கடை ஒழிப்போம்!
# சமதர்ம சமுதாயம் படைப்போம்!



உன் சாத்திரத்தை விட,
உன் முன்னோரை விட,
உன் வெங்காயம்
வெளக்குமாத்தை விட,
உன் அறிவு பெரிது
அதை சிந்தி!

- தந்தை பெரியார்

நாய்களும், மாடுகளும் கூடச் சுதந்திரமாய் செல்லும் தெரு வழியே சில மனிதர்கள் செல்ல அனுமதிக்கப்படவில்லை. குளம் குட்டை நீர்நிலைகளில் பறவைகளும் மிருகங்களும் ஒன்றாக நீர் அருந்துகின்றன. ஆனால் பொதுக்கிணற்றில் நீர் எடுத்துகொள்ள குறிப்பிட்ட இனத்தவர் மறுக்கப்படுகின்றனர். மனிதகுலமே வெட்கி தலைகுனிய வேண்டிய இந்த நிலை இந்த டிஜிட்டல் யுகத்திலும் தொடர்ந்து கொண்டிருக்கிறது.... ஆணவக் கொலைகளாக, அதிகாரச் செருக்காக, அடிமை வாழ்வாக!

சக மனிதனை மனிதனாக நடத்தாமல், மிருகங்கள் போலும், தங்கள் வீடுகளில் அடிமட்ட அடிமை வேலைகளைச் செய்பவர்களாவும் கருதும் ஆதிக்க மனநிலையின் இன்னொரு பேர்தான் தீண்டாமை. நெருப்பைத் தொட்டால் சுடும், கெட்டுப்போன பொருட்களைத் தொட்டால் கிருமிகள் தொற்றிக்கொள்ளும், மின்சாரத்தை தொட்டால் ஷாக் அடிக்கும் என்பதெல்லாம் ஏற்றுக்கொள்ளக் கூடியவையே. ஆனால் சகமனிதனை தொட்டால் தீட்டு ஒட்டிக் கொள்ளும் என்னும் வாதம் மேற்சொன்னவற்றில் எவ்வகையைச் சேர்ந்தது? அப்படி தீட்டு ஒட்டிக்கொள்ளும் அளவிற்கு சக மனிதர்கள் எதைச் செய்தார்கள்? எப்படி இந்த கொடிய பழக்கம் ஏற்பட்டது?

'சாதி இரண்டொழிய வேறில்லை' என்றார் ஔவையார். ஆனால் அதன்பிறகு ஆயிரம் ஜாதிகளும், அவரவர்க்கென தனி நீதிகளும் தோன்றின. அக்காலத்தில் ஒன்றாக இருந்த மனித இனம் காலப்போக்கில், செய்யும் தொழிலால் பிரிந்தன. அதுவே சாதி முறை ஏற்பட வழிகோலியது. சாமிக்கு அர்ச்சனை செய்பவன் உயர்ந்த சாதியாகவும், சகமனிதனுக்கு சவரம் செய்பவன் தாழ்ந்த சாதியாகவும் வருணாசிரம தர்மம் பிரித்து வைத்தது. அதன் விளைவினால் பல சாதிகள் தோன்றி தன்னுடைய சாதி உயர்ந்தது என்றும் அடுத்தவன் சாதி தாழ்ந்தது என்றும் கொம்பு சீவி நின்றன. சுயசாதி பெருமிதங்களும், சாதி அடையாளங்களை பாதுகாத்துக் கொள்ள வேண்டும் என்கிற ஆதிக்க உணர்வுகளும் இந்தியாவின் எந்த சாதியையும் மோதலுக்குள்ளாக்காமல் விட்டுவைக்கவில்லை.

ஒவ்வொரு குறிப்பிட்ட செயலையும் குறிப்பிட்ட மக்கள் செய்ய வருணாசிரம கோட்பாடு வழிவகுத்தது. அதன்காரணமாக சமூகத்தில் குறிப்பிட்ட சாதிகளைச் சேர்ந்த மக்கள் இன்றும் கீழ்த்தரமான வேலைகளைச் செய்யப் பணிக்கப்படும் நிலை தொடர்கிறது. இவர்களில் பட்டியல் இன சாதிகளைச் சேர்ந்த மக்களே பெரும்பான்மையினர்.

மேசையிலிருந்து...

மேலை நாடுகளில் மனிதகுல பாகுபாடு, ஆண்டான்-அடிமைச் சமுதாயமாக இருந்தபோது, இந்தியாவில் அது ஆரியர்கள்-தாசர்கள் என வருண வடிவம் பெற்றிருந்தது. பின்னர் இது பார்ப்பனர்கள், சத்திரியர்கள், வைசிகர்கள், சூத்திரர்கள் என நான்கு வருணமாகவும், பிற்காலத்தில் ஏராளமான உழைப்புப் பிரிவினைகள் ஏற்பட்டபோது அதில் ஏராளமான மாற்றங்கள் ஏற்பட்டு சாதிக்குள் உபசாதிகள் கிளைசாதிகள் என பல்லாயிரம்

சாதிகள் நிலவும் சமூக அமைப்பாகவும் இந்திய சமூகம் மாறியது. இந்தியாவில் சாதி ஒடுக்குமுறைக்கு எதிரான போராட்டத்தின் பிரிக்க முடியாத பகுதியாக வர்க்க ஒடுக்குமுறை மாறியுள்ளதற்கு இதுவே காரணம்.

உழைக்கும் வர்க்கத்தின் கணிசமான பிரிவினர் பொருளாதார ரீதியாக மட்டுமல்லாமல் சாதி ரீதியாகவும் ஒடுக்கப்பட்டு, இரட்டை ஒடுக்கு முறைக்குள் திணிக்கப்பட்டுள்ளனர். இவர்களை அணி திரட்டாமல் உழைக்கும் வர்க்கத்தின் ஒற்றுமையும் வெற்றியும் சாத்தியமல்ல. இந்த இலக்கை அடையாத வரை உழைக்கும் மக்களை சாதி ரீதியாக, பொருளாதார ரீதியாக மற்றும் வர்க்க ரீதியாக பிரித்தாளுகின்ற அரசியல், இவர்களின் முன்னேற்றத்திற்கும் மாற்றத்திற்கும் முட்டுக்கட்டைகளாகவே இருக்கும். தொழில் ரீதியாக, ஜாதி ரீதியாக, மதரீதியாக மற்றும் பொருளாதார ரீதியாக பிரித்து வைக்கப்பட்டிருக்கும் உழைப்பாளி மக்களைத் திரட்டுவதற்கு பொதுவான முயற்சிகள் மட்டும் போதாது. தீண்டாமை மற்றும் சாதிய ஒடுக்குமுறைக்கு எதிராகவும் குரல் கொடுத்து சிறப்பான முயற்சிகள் மேற்கொள்ள வேண்டும்.

தமிழகத்தில் வர்க்க மற்றும் சமூக ஒடுக்குமுறைகளுக்கு எதிரான போராட்டங்கள் பல தருணங்களில் முன்னெடுக்கப்பட்டுள்ளன. நில பிரபுத்துவ எதிர்ப்பு, சாணிப்பால் குடிக்க வைப்பது, சவுக்கால் அடிப்பது போன்ற கொடுமையான சாதிய வன்முறைகளை எதிர்த்து எதிர்ப்புக் குரல்களும், கண்டனப் போராட்டங்களும் அவ்வப்போது நடந்திருக்கின்றன. விவசாயத் தொழிலாளர்களின் கூலி உயர்வு மற்றும் தலித் மக்கள் மீதான சமூக ஒடுக்குமுறைகளை எதிர்த்து போராடியவர்கள் மீது நிலபிரபுக்கள் எவ்வளவு ஆத்திரம் அடைந்தார்கள் என்பதற்கு கீழவெண்மணி படுகொலை என்றும் மாறாத வடுவாகும்.

1995-96ஆம் ஆண்டுகளில் தென்மாவட்டங்களில் நடந்த சாதிய மோதல்களில் பல்லாயிரக்கணக்கான தலித் மக்கள் பாதிக்கப்பட்டனர். மாஞ்சோலை தோட்டத் தொழிலாளர்களின் போராட்டத்தின் போது காவல்துறை நடத்திய காட்டுமிராண்டித்தனமான தாக்குதலும், பாப்பாபட்டி, கீரிப்பட்டி, நாட்டார்மங்கலம், கொட்டக்கச்சியேந்தல் ஆகிய ஊராட்சிகளில் 10 ஆண்டுகளுக்கு மேலாக உள்ளாட்சித் தேர்தல் நடத்த முடியாத அளவுக்கு சாதிய சக்திகள் வன்முறைகளைக் கட்டவிழ்த்துவிட்ட நிகழ்வுகளும், உறுதியான பல போராட்டங்களுக்குப் பின்னர் இந்த கிராமங்களில் உள்ளாட்சித் தேர்தல் நடத்தப்பட்ட தரவுகளும், ஊராட்சி மன்றத் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்ட காரணத்திற்காக மேலவளவு முருகேசன் படுகொலை செய்யப்பட்ட வன்முறையும், தீண்டாமையும், சாதிய பாகுபாடும் இந்த மண்ணில் வெறியாட்டம் போடுவதை பறைசாற்றும் நிகழ்வுகளாகும்.

இவை மட்டுமா? வாச்சாத்தி கிராமத்தில் வனக்காவலர்களும், காவல்துறையினரும் பழங்குடி மக்கள் மீது நடத்திய கொடூரமான தாக்குதல்களையும், பழங்குடி பெண்கள் பலரை பாலியல் வன்கொடுமைக்கு உட்படுத்திய கொடுமைகளையும் இந்த தேசம் இன்னும் மறந்துவிடவில்லை. இவ்வாறு நடைபெற்ற பல தொடர்ச்சியான சாதிக்கொடுமைகள் மற்றும் தீண்டாமை வெறியாட்டங் களை எதிர்த்து நடைபெற்ற தொடர்ச்சியான போராட்டங்கள் மற்றும் இயக்கங்களின் பின்னணியிலும் தான் 2007ஆம் ஆண்டு மே 16ஆம் நாள் தமிழ்நாடு தீண்டாமை ஒழிப்பு முன்னணி உருவானது.

ஏறத்தாழ ஒரு கிலோமீட்டர் நீளத்திற்கு உத்தபுரத்தில் பல பொதுச் சாலைகளில் தலித்துகள் நுழையாதபடி கட்டப்பட்டிருந்த தீண்டாமைச் சுவரை தகர்க்க இந்த முன்னணி எடுத்த உக்கிரமான நடவடிக்கைகள் மூலமாக அப்பகுதி தலித் மக்கள் பொதுப்பாதையில் நடந்தது செல்ல அனுமதி கிடைத்தது. இதேபோல் உத்தபுரத்தில் உள்ள முத்தாலம்மன் கோவில் நுழைவுப் போராட்டமும் பல அடக்குமுறைகளை எதிர்த்து வெற்றி கண்டது. தலித்துகளிலும் தலித்துகளால் கொடூரமான சாதிய ஒடுக்குமுறைக்கும் இழிதொழிலுக்கும் ஆளாக்கப்பட்டிருக்கும் அருந்ததிய மக்களுக்கு இடஒதுக்கீட்டில் உள் ஒதுக்கீடு என்பது அருந்ததிய மக்களின் கால் நூற்றாண்டு கனவாகும். இந்தக் கனவை நனவாக்க தீண்டாமை ஒழிப்பு முன்னணியுடன், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியும் இணைந்து மாவட்டந் தழுவிய மாநாடுகளையும், மறியல் போராட்டங்களையும், தர்ணாக்களையும், இருபதாயிரம் அருந்ததிய மக்கள் பங்கேற்ற பேரணியையும் நடத்தி 3 சதவீத உள்ஒதுக்கீட்டு உரிமையை பெற்றுத் தந்தது.

சட்டப்படி தீண்டாமையும் சாதிய பாகுபாடுகளும் ஒழிக்கப்பட்டுவிட்டதாக இந்திய சமூகம் ஏற்றுக்கொண்டு 70 ஆண்டுகள் கடந்துவிட்டது ஆனால் இன்னும் சமூகத்தின் மாற்றமுடியாத விதியாக சாதி இருக்கிறது. இந்த சூழ்நிலை இந்நாட்டில் உள்ள உழைக்கும் வர்க்கத்தின் ஒற்றுமையை குலைக்கும் வகையில் அமைந்துள்ளது. அவர்கள் ஒவ்வொருவருக்குள்ளும் பகைமை வளர்க்க இது வழிகோலுகிறது.

இந்தியா ஜனநாயக நாடு என்கிறோம். இந்திய நாடு என் வீடு, இந்தியன் என்பது என் பேரு. எல்லா மக்களும் என் உறவு என்று பாடுகிறோம். உண்மையில் எது ஜனநாயகம்? ஒரு சர்வாதிகார ஆட்சியாக இல்லாமல் ஒரு நாட்டினுடைய எல்லா தரப்பு மக்களுக்கும் அவரவர்களின் பிரதிநிதிகளை தேர்ந்தெடுக்கிற உரிமை இருப்பதைத் தான் ஜனநாயகம் என்போம். அதைத்தான் ஜனநாயக நாடு என்று கூறுவோம். 'ஒரு மனிதன் ஒரு வாக்கு ஒரு மதிப்பு' அதாவது 'ஒன் மேன் ஒன் வோட் ஒன் வேல்யு' என்கிற அடிப்படையில் சட்ட மாமேதை டாக்டர் அம்பேத்கர் அவர்கள் வடிவமைத்ததுதான் இந்திய அரசியலமைப்புச் சட்டம். இந்த சாசனம் உலக நாடுகளுக்கு வழிகாட்டியாக இருப்பது நமக்கெல்லாம் பெருமை தரக்கூடிய விஷயம்தான். ஆனால், 'ஒரு மனிதன் ஒரு வாக்கு ஒரு மதிப்பு' என்கிற கோட்பாடு நம்முடைய சட்ட அமைப்பில் உள்ளது; ஆனால் நடைமுறையில் உள்ளதா என்பது மிகப்பெரிய கேள்வி.

பாப்பாப்பட்டி, கீரிப்பட்டி, நாட்டார்மங்களம் போன்ற இடங்களில் நடந்த பல சம்பவங்கள் நமக்கு உணர்த்துவது என்ன? பின்தங்கிய சமுதாயத்திலிருந்து ஒருவர் ஒரு தேர்தலில் போட்டியிட்டு மக்கள் பிரதிநிதியாக தேர்ந்தெடுக்கப்பட்டால் அதை மேல்தட்டு சாதிவெறியர்களால் பொறுத்துக் கொள்ள முடியாது என்பதுதான். அதன் விளைவு, தேர்தெடுக்கப்பட்ட மக்கள் பிரதிநிதி வெட்டி சாய்க்கப்படுகிறார். இதற்கு உதாரணம் மேலவளவு முருகேசன். தலித்துகள் எங்கெல்லாம் அவர்களுடைய ஜனநாயக உரிமைகளை நிலைநாட்ட போராடுகிறார்களோ அங்கெல்லாம் மற்ற ஜாதி வெறியர்களால் பின்தள்ளப்படவோ அல்லது வெட்டி கொலை செய்யப்படவோ ஆளாகிறார்கள். அதற்கு உதாரணம் தர்மபுரி, மரக்காணம் சமீபத்தில் நடந்த பொன்பரப்பி சாதியக் கொடுமைகள்.

எல்லா மக்களுக்கும் அரசியல், பொருளாதார மற்றும் சமூக உரிமை இருக்கவேண்டும் என்கிறது அரசியல் சாசனம். ஆனால் சாதிய ரீதியாக மதரீதியாக அரசாங்கங்கள் இயங்கிக் கொண்டிருப்பது மக்களுக்கு அரசாங்கத்தின் மீதும் அதன் அதிகாரத்தின் மீதும் அவநம்பிக்கையை ஏற்படுத்தி வருகின்றன. இது ஒரு குறிப்பிட்ட சமுதாயத்தின் ஜனநாயக உரிமையை பறிக்கும் செயலாகும். இதுகுறித்த ஆழ்ந்த விவாதங்கள், கலந்துரையாடல்கள், கருத்தாக்கங்கள் இப்போதுள்ள காலசூழ்நிலையில் அவசியம் தேவைப்படுகிறது.

இரட்டை குவளை முறையை ஒழித்துவிட்டதாக அரசாங்கம் கூறினாலும் நாம் இன்னமும் அத்தகைய செய்திகளை கேட்ட வண்ணம் தான் இருக்கிறோம். தீண்டாமையும், உயர்ந்தகுலம் தாழ்ந்தகுலம் என்ற வர்ணாசிரமங்களும் இன்னும் கிளைபரப்பி வருகின்றன என்பதற்கு ஆதாரம் தான் நாம் அவ்வப்போது ஊடகங்களில் செய்திகளாக கண்டு வரும் ஆணவக்கொலைகள். இறந்த தலித் மனிதரின் பிணத்தை பொதுவழியில் எடுத்துக் செல்லக்கூடாது என்று இன்றளவும் சில ஊர்களில் இருக்கும் கட்டுப்பாடுகள் மனிதகுலம் பூண்டுள்ள மடத்தனத்தின் உச்சமே.

வீசும் காற்று பணக்காரனுக்கென்றோ, உயர்ந்த சாதிக்காரனுக்கென்றோ தனியாக வீசுவதில்லை. பொழிகின்ற மழையும் நிலம் நோக்கி பெய்கிறதே ஒழிய நிறம் பார்த்து இனம் பார்த்து பெய்வதில்லை. இயற்கையின் நிலை இவ்வாறிருக்க, மனிதன் மட்டும் உயர்ந்தோன் தாழ்ந்தோன் என்று பேதங்களை பேசி குறிப்பிட்ட மக்கள் கூட்டத்தை மட்டும் குறிவைப்பது மனிதகுல வளர்ச்சிக்கு முட்டுக்கட்டை போடுவதான செயலாகும். யார் வேண்டுமானாலும் எந்த வேலை வேண்டுமானாலும் செய்யலாம் என்ற ஆரோக்கியமான சூழ்நிலை தோன்றியுள்ள நிலையில் வருணாசிரம முறைகளின்படி மனிதர்களை பிரித்தாளும் போக்கை கைவிட்டு உடற்கூறின் அடிப்படையில் ஔவை சொன்ன சாதி இரண்டொழிய வேறில்லை என்ற வாக்கினை ஏற்று சமதர்ம சமுதாயம் படைக்கவும் பொதுவுடைமைக் கொள்கையினை திசை எட்டும் கொண்டு சேர்க்கவும் இந்த தீண்டாமை எனும் நச்சுக்கொடிகளை களையெடுக்க வேண்டிய நேரம் வந்துள்ளது இப்போது.




சமூகத்திலுள்ள தாழ்த்தப்பட்ட மக்கள் மீதான தாக்குதல்களுக்கு எதிராகவும் அவர்களின் உரிமைகளுக்காகவும் முழு நேரமும் தொடர்ந்து போராடிக்கொண்டிருக்கும் தீண்டாமை ஒழிப்பு இயக்கம் நடத்தும் "சாதியம் ஒழிப்போம் மனிதம் வளர்ப்போம்'' பிரச்சார இயக்கத்தில் அரசு ஊழியர்கள்-ஆசிரியர்களாகிய நாம் அனைவரும் பங்கெடுத்து அரசு அலுவலகங்களில், பள்ளி வளாகங்களில், பொது இடங்களில் தீண்டாமையின் தீமைகள் குறித்தும் அதை ஒழிக்க நாம் அனைவரும் செய்ய வேண்டிய ஆக்கபூர்வ செயல்கள் குறித்தும் விரிவான கலந்துரையாடல்களை ஏற்படுத்தி அனைத்து தர மக்களும் தீண்டாமையின் தீமைகளை உணரவும், சாதியக் கொடுமைகளை வேரறுக்கவும் அவர்தம் சிந்தனைகளைத் துாண்டி சாதி பேதமற்ற சமத்துவ சமுதாயத்தை நோக்கி மனிதத்தை நகர்த்த நம்மால் இயன்ற அனைத்து முயற்சிகளையும் எவ்வித சுணக்கமோ தயக்கமோ இன்றி மேற்கொள்ள இந்த மேடையை நாம் பயன்படுத்த வேண்டும்.

அரசு ஊழியர்கள்-ஆசிரியர்கள் பல சமூக இயக்கங்களில் பங்கெடுத்து வெற்றிகரமாக நடத்தியவர்கள். இந்த பிரச்சார இயக்கத்தின் மூலமாகவும் கணிசமான மக்கள், சாதி பேதங்களை விட்டுவெளியே வர விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும். செய்து முடிக்கப்பட்ட சாதனைகள் யாவும் செய்ய முடியாதவைகள் என்று முதலில் பலரால் ஒதுக்கப்பட்டவைதான். அத்தகைய சாதனைகளை செய்பவர்கள் அரசு ஊழியர்கள்-ஆசிரியர்கள் என்ற பெயரை இன்னொரு முறை நிலைநாட்டுவோம்.

மதம் மனிதனை மிருகமாக்கும்; சாதி மனிதனை சாக்கடையாக்கும். தீண்டாமை ஒழிய வேண்டுமானால் சாதிகள் ஒழிய வேண்டும். கல்வி அறிவும், சுயமரியாதை எண்ணமும், பகுத்தறிவுத் தன்மையுமே தாழ்ந்து கிடக்கும் மக்களை உயர்த்தும். போன்ற யதார்த்தக் கருத்துக்களை மக்கள் மனதில் விதைத்து தீண்டாமை எனும் இருள்போக்கி எல்லோரும் ஓர்குலம் எல்லோரும் ஓரினம் எல்லோரும் இந்நாட்டு மன்னர் என்பதை தீண்டாமை ஒழிப்பு முன்னணியுடன் சேர்ந்து களப்பணியாற்றி வெற்றிக் கனி பறிப்போம். ❖

## போற்றத்தக்கது மட்டுமல்ல... அனைவராலும் பாராட்டத்தக்கதே...

*தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் தூத்துக்குடி மாவட்டத் தலைவரான ஞா.கலையரசன் வருவாய்த் துறையில் 1984இல் இளநிலை உதவியாளராக பணியில் சேர்ந்தார். அவரது உடல் ஊனமுற்றதாக இருந்தாலும் மிகுந்த மனவல்லமை படைத்த அவர் பணியில் சேர்ந்த நாள் முதல் வருவாய்த் துறை அலுவலர் சங்கம் மற்றும் தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தில் தன்னை இணைத்துக்கொண்டு 1990 முதல் 2010 வரை திருச்செந்தூர் வட்டத் தலைவராக, வட்டப் பொருளாளராக செயல்பட்டார். அவர் வட்டக் கிளை பொருளாளராக இருக்கும் போதுதான் திருச்செந்தூர் வட்டக் கிளைக்கு சொந்தமாக கட்டிடம் கட்டப்பட்டது. 2011 முதல் 2015 வரை தூத்துக்குடி மாவட்டத்தில் மாவட்ட இணைச் செயலாளர், மாவட்ட துணைத் தலைவர் பொறுப்புகளை திறம்பட செய்த காரணத்தால் 2016 முதல் மாவட்டத் தலைவராக தேர்வு செய்யப்பட்டு செயலாற்றி வருகிறார். அவருடைய தலைமையின்கீழ் கட்டிடப் பணிக்குழு அமைக்கப்பட்டு தூத்துக்குடி மாவட்ட கட்டிடம் பிரம்மாண்டமாக அனைவராலும் வியக்கத்தக்க வகையில் கட்டி எழுப்பப்பட்டு வருகிறது.*

*34 வருட அரசுப் பணியை அப்பழுக்கற்ற முறையில் நிறைவு செய்த அவர் 31.5.2019 அன்று வயது முதிர்வின் காரணமாக அரசுப் பணியிலிருந்து விடுவிக்கப்பட்டார். அவர் தனக்கு கிடைக்கப் பெற்ற ஓய்வூதிய பணப்பலன்களிலிருந்து 2019 சூன் மாதத்தில் தூத்துக்குடி மாவட்ட கட்டிடப் பணிக்கு ரூ.1 லட்சம் மற்றும் அனைவருக்கும் கல்வி, வேலை கேட்டு போராடும் டிஒய்எப்ஐ-க்கு ரூ.50,000 என மொத்தம் ஒன்றரை லட்ச ரூபாயை நன்கொடையாக வழங்கினார். அவரது நடவடிக்கைகள், சங்க செயல்பாடுகள், போராட் டங்களை வழிநடத்தும் பாங்கு, சமூகத்தின்பால் அவரது செயல்பாடுகள் அனைத்தும் அனைவராலும் பின்பற்றத்தக்கதே ஆகும். அன்னாரின் சமூகப் பணி தொடர மாநில மையத்தின் சார்பில் வாழ்த்துகிறோம்.* ❖

# தேசிய கல்விக் கொள்கை வரைவு அறிக்கை 2019-ன் மீதான

# தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் கருத்தும் விமர்சனங்களும்

**மதிப்பிற்குரிய மத்திய மனிதவளத்துறை அமைச்சர் அவர்கட்கு!** வணக்கம்.

மத்திய மனிதவள மேம்பாட்டு அமைச்சகம் மே,31, 2019 அன்று வெளியிட்ட புதிய தேசியக் கல்விக் கொள்கையின் வரைவு அறிக்கையினை முழுவதுமாக, ஆழ்ந்து படித்தோம். அவ்வறிக்கையில் பல அம்சங்கள் ஏழை எளிய மக்களின் கல்வி உரிமைகளை பாதிப்பதாகவும், குழந்தை உரிமைகளை மறுப்பதாகவும், சமூகநீதிக்கு எதிராகவும், இந்திய அரசியல் சாசனத்திற்கு முரணாகவும் உள்ளன. எனவே இவ்வரைவறிக்கை மீதான எமது அமைப்பின் கருத்துக்களையும், விமர்சனங்களையும் முன் வைக்கிறோம். எங்களது கருத்துக்களையும், விமர்சனங்களையும், அவற்றில் உள்ள நியாயங்களையும் கருத்தில் கொண்டு புதிய தேசிய கல்விக் கொள்கையில் மாற்றங்கள் செய்யக் கேட்டுக் கொள்கிறோம்.

**1. அரசியலமைப்புச் சட்டம் வகுத்த தரமான, இலவசமான, கட்டாயக் கல்வி எங்கே?**

இந்திய அரசிலமைப்புச் சட்டம் 1949ஆம் ஆண்டு வடிவமைக்கப்பட்டபோது அதன் 45ஆம் பிரிவு 10 ஆண்டுகளுக்குள் 14 வயது வரையிலான குழந்தைகளுக்கு தரமான, இலவச, கட்டாய பள்ளிக் கல்வி அளிப்பதை உறுதி செய்ய வேண்டும் என்று வரையறுத்திருந்தது. அது நாளதுவரை நடைபெறவில்லை. 2002ஆம் ஆண்டு இந்தப்பிரிவு திருத்தப்பட்டு (86ஆம் அரசியல் சாசன சட்டத்திருத்தம்) அதன்படி ஒவ்வொரு அரசாங்கமும் 6 முதல் 14 வயது வரையிலான குழந்தைகளுக்கு தரமான, இலவசமான

கட்டாயப் பள்ளிக் கல்வியை வழங்க வேண்டும் என்று வலியுறுத்தியது. 2010ஆம் ஆண்டில் இதில் மேலும் திருத்தம் செய்யப்பட்டு ஆறு வயது வரையிலான குழந்தைகளுக்கு உரிய குழந்தை பாதுகாப்பும், கல்வியும் வழங்க வேண்டுமென்று திருத்தம் செய்யப்பட்டது. ஆனால் அரசியலமைப்புச் சட்டம் சொன்ன விதிகள் அதன் அர்த்த அடர்த்தியோடு நிறைவேற்றப்படாமல் பேருக்கு அரசுப் பள்ளிகள் தோற்றுவிக்கப்பட்டதே தவிர தரமான கல்விக்கு அதில் முக்கியத்துவம் தரப்படவில்லை.

தற்போது வந்துள்ள புதிய கல்விக் கொள்கை வரைவறிக்கையில் 2030ஆம் ஆண்டுக்குள் 3 வயது முதல் 18 வயதுக்கு உட்பட்ட அனைத்து குழந்தைகளுக்கும், தரமான, இலவச, கட்டாயக் கல்வி அளிக்க வேண்டும் என கூறப்பட்டுள்து. இதை நடைமுறைப்படுத்த சரியான திட்டம் அறிக்கையில் இல்லை. தனியார் பள்ளிகள் புற்றீசல்கள்போல பெருகியுள்ள நிலையில் அவற்றை ஒழிக்காமல் 3 வயது முதல் 18 வயது வரையிலான மாணவர்களுக்கு தரமான, இலவச, கட்டாயக் கல்வி எப்படிச் சாத்தியம் என்பதை அமைச்சகம் விளக்க வேண்டும். தரமான, இலவச, கட்டாயக் கல்வி அளிப்பது அரசின் பொறுப்பும் கடமையும் என்பதை இந்த அறிக்கையில் மத்திய அரசு ஏற்றுக்கொண்டுள்ளதா?அப்படி ஏற்றுக்கொண்டுள்ளது என்றால் தனியார் பள்ளிகள் குறைக்கப்படும் என்றோ, இனி புதிததாக தனியார் பள்ளிகளுக்கு அனுமதி கிடையாது என்றோ? தனியார் பள்ளிகளை முற்றிலும் ஒழித்துவிட்டு அரசாங்கமே பள்ளிகளை நடத்தும் என்றோ ஏன் அந்த அறிக்கையில் தெரிக்கப்படவில்லை என்பதற்கு விளக்கம் தேவை.

**2. அரசுப்பள்ளிகளை மூடிவிட்டால் தரமான, இலவச, கட்டாயக் கல்வி எப்படி சாத்தியம்?**

20க்கும் குறைவான குழந்தைகள் படிக்கும் அரசு பள்ளிகளை மூடிவிடலாம் என்கிறது வரைவு அறிக்கை. மத்திய அரசின் ஒருங்கிணைந்த மாவட்ட கல்வி ஆய்வுக்குழு அறிக்கையின்படி நாட்டில் உள்ள 40% அரசுப் பள்ளிகளில் மாணவர்களின் எண்ணிக்கை 30க்கும் குறைவாக உள்ளது. இதன் அடிப்படையில் பார்த்தால் மாநிலம் முழுவதும் சுமார் 9000 பள்ளிகள் மூடப்பட வேண்டியிருக்கும். இதன்விளைவு ஒரு பகுதி மாணவர்களை தனியார் பள்ளிகளை நோக்கித் தள்ளும், இன்னொரு பகுதி மாணவர்களின் கல்வி தடைபடும். இப்படி ஏராளமான அரசுப்பள்ளிகளை மூடிவிட்டு, தரமான, இலவச, கட்டாய பள்ளிக்கல்வி எப்படி சாத்தியம் என்பதை அமைச்சகம் விளக்க வேண்டும்.

**3. இறுதித் தேர்வு எழுதி தேர்ச்சி பெற்றவர்களுக்கு மீண்டும் நுழைவுத் தேர்வு எதற்கு?**

"கல்லூரி மற்றும் பல்கலைக்கழக நுழைவுத் தேர்வை நடத்துவதற்கு தேசிய தேர்வு முகமை வலுப்படுத்தப்படும். 2020 முதலே இது நடப்புக்கு வரும்" என்கிறது இந்த வரைவறிக்கை. அதாவது 2020ஆம் ஆண்டிலிருந்து பி.ஏ, எம்.ஏ., போன்ற

பட்டப்படிப்புகளுக்காக கல்லூரிகளில் சேர்வதற்கும்கூட நீட் தேர்வைப் போன்ற நுழைவுத் தேர்வை இனிமேல் மாணவர்கள் எழுத வேண்டும் என்பது இதன் பொருள். ஒவ்வொரு ஆண்டும் அந்தந்த வகுப்புகளில் இறுதித் தேர்வு எழுதி தேர்ச்சி பெற்றுத்தானே குழந்தைகள் அடுத்தடுத்த வகுப்புகளுக்கு போகிறார்கள். ஒவ்வொரு வகுப்பைக் கடக்கும்போதும் குறைந்த பட்ச கற்றல் அடைவுகளோடுதானே அவர்கள் செல்கிறார்கள். அப்படி இருக்க எதற்காக நுழைவுத் தேர்வு? பன்னிரெண்டாம் வகுப்பு தேர்வே ஒரு வகை நுழைவுத் தேர்வுதானே. எனவே உயர்கல்வி சேர்க்கைக்கு நுழைவுத் தேர்வு தேவையில்லை என்பதை பரிசீலிக்க வேண்டும்.

இது மாணவர்களுக்கு மேலும் மேலும் மன அழுத்தங்களை தருவதோடு, தனியார் நுழைவுத் தேர்வு மையங்கள் புற்றீசல் போல பெருகி கொள்ளை லாபம் அடிக்க வழிவகை செய்யும், மேலும் மாணவர்கள் தாங்கள் படிக்க வேண்டிய வகுப்புகளில் தேர்ச்சி பெறும் அளவுக்கு மட்டும் படித்துவிட்டு ஆண்டு முழுவதும் நுழைவுத் தேர்வுக்கான தயாரிப்பில் காலத்தை விரயம் செய்து உண்மையான கற்றலறிவை பெற இயலாதவர்களாகும் பேராபத்தையும் ஏற்படுத்திவிடும் என்பதையும், தனியார் நுழைவுத்தேர்வு மையங்களில் பணம் செலுத்தி பயிற்சி பெறமுடியாத கிராமப்புற, ஏழை, எளிய மற்றும் நடுத்தர வர்க்க மாணவர்கள் இதனால் தங்கள் பள்ளி மற்றும் கல்லூரி படிப்பை பாதியிலேயே விட வேண்டிய நிர்ப்பந்தம் எழும் என்பதையும் இந்த அரசாங்கம் உணர்ந்து நுழைவுத் தேர்வு முறைகளை கைவிட வேண்டும்.

**4. 3, 5 மற்றும் 8ஆம் வகுப்புகளுக்கு பொதுத்தேர்வு முறை தேவைதானா?**

3, 5 மற்றும் 8ஆம் வகுப்புகளில் பொதுத்தேர்வுகள் நடத்தப்படும் என்று புதிய கல்விக்கொள்கையின் வரைவறிக்கை கூறுகிறது. இப்படிச் செய்வது கிராமப்புற, ஏழை எளிய மாணவர்களை கல்விக்கூடங்களிலிருந்து வெளியேற்றுவதற்கான முயற்சியாக அமைந்துவிடும். பள்ளிக் கல்வியை தொடர் மதிப்பீடு செய்யவே 3, 5 மற்றும் 8ஆம் வகுப்புகளில் மாநில அளவிலான மதிப்பீட்டுத் தேர்வுகள் நடத்த பரிந்துரைத்திருப்பதாக அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. கிராமப்புறங்களில் தகுதியான ஆசிரியர், தரமான கல்வி, அடிப்படை வசதிகள் உறுதிபடுத்தப்பட்ட பள்ளிகளை அமைக்காமல் மாநில அளவிலான பொதுத் தேர்வுக்கு கிராமப்புற மாணவர்களை நிர்ப்பந்திப்பது அவர்களை பள்ளிகளிலிருந்து விரட்டும் செயலாக அமைந்து விடும்.

நாடு விடுதலையடைந்து 70 ஆண்டுகளாகியும் கிராமப்புறங்களில் இன்றும் அடிப்படை வசதிகளையோ தரமான கல்வியை வழங்கக்கூடிய தகுதியான ஆசிரியர்களையோ அனைத்து பள்ளிக்கூடங்களிலும் நியமிக்காத அரசாங்கங்களைத்தான் பார்த்து வருகிறோம். இத்தகைய சூழ்நிலையில் 3, 5 மற்றும் 8ஆம் வகுப்புகளில் பொதுத் தேர்வு என்ற முடிவு தனியார் பள்ளிகளை நோக்கிச்செல்ல நடத்தப்படும் தந்திரமாவே பார்க்க வேண்டியுள்ளது. மேலும் ஏழை எளிய கிராமப்புற மாணவர்களை இது கல்வி கற்கும் ஆர்வத்திலிருந்து வெளியே தூக்கி எறிந்துவிடும். எனவே 3,5 மற்றும் 8ஆம் வகுப்புகளில் பொதுத்தேர்வு என்ற நடைமுறையை கைவிட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறோம்.

**5. மூன்றாவது மொழிப்பாடம் கட்டாயமாக்கப்படக்கூடாது**

மூன்றாம் வகுப்பிலிருந்து மூன்றாவது மொழி ஒன்றை விருப்பப் பாடமாக எடுக்க வேண்டும் என்றும் ஆறாம் வகுப்பிலிருந்து மூன்றாவது மொழி ஒன்றைக் கட்டாயமாகக் கற்க வேண்டும் என்றும் வரைவறிக்கை கூறுகிறது. இந்த பரிந்துரையைப் படிக்கும்போது இந்த வரைவறிக்கை கிராமப்புற ஏழை எளிய, பழங்குடி மற்றும் ஒடுக்கப்பட்ட பிரிவினரை கருத்தில் கொண்டு ஏற்படுத்தப்பட்டதா என்ற சந்தேகமே எழுகிறது. ஏற்கெனவே இரண்டு மொழிகளைக் கற்பதற்கு கிராமப்புற ஏழை எளிய மாணவர்கள் திண்டாடி வரும் நிலையில் மூன்றாவது மொழி அவர்களுக்கு பெருஞ்சுமையாகிவிடும் என்பதை அறிக்கை வரைவாளர்கள் கவனத்தில் கொள்ள வேண்டும். எனவே முன்றாவது மொழித் திணிப்பை ஏற்படுத்தும் முன்னர் பள்ளிகளில் குறிப்பாக கிராமப்புற பள்ளிகளில் அடிப்படை வசதிகள், தகுதியான ஆசிரியர்கள், தரமான கல்வி போன்றவற்றை உறுதி படுத்த வேண்டும். அதுவரையில் மூன்றாவது மொழி என்பது விருப்பப் பாடமாகக் கூட சேர்க்கப்படக்கூடாது என்று வலியுறுத்துகிறோம்.

**6. கல்வியை மாநிலப் பட்டியலிலிருந்து அகற்றிவிடும் ஆபத்து இதில் உள்ளது**

பள்ளிக்கல்வி, கல்லூரிக்கல்வி, பல்கலைக் கழக கல்வி மற்றும் உயர்கல்வி நிறுவனங்கள் அனைத்தையும் தேசிய கல்வி ஆணையம், ராஷ்டிரிய சிக்ஷா ஆயோக் என்ற அதிகாரக் கூட்டமைப்பின் கீழ் கொண்டுவர தேசியக் கல்விக் கொள்கை பரிந்துரைக்கிறது. இந்த நிறுவனத்திற்கு பிரதமரே தலைவராக இருப்பார் என்று கூறப்பட்டுள்ளது. இது மாநிலக் கல்வித்துறையின் அதிகாரங்களை பறிக்கும் செயலாகும். கல்வித்துறையின் அனைத்து அதிகாரங்களையும் பிரதமர் தன் கையில் வைத்துக்கொண்டு மாநிலக் கல்வித்துறையை தேசிய கல்வி ஆணையத்தின் முகவான்மை அமைப்பாக மாற்ற முனைந்திருப்பது கூட்டாட்சி தத்துவதத்திற்கு எதிரானது ஆகும். இது கல்வியை மாநிலப் பட்டியலில் இருந்து தூக்கிவிடும் ஏற்பாடாகும். மாநில கல்வித்துறைக்கு அதிகாரங்கள் உள்ள வகைக்கு இந்த வரைவில் மாற்றங்கள் செய்யப்பட வேணடும்

**7. அனைத்திந்திய தேர்வு முறையைக் ஏன் கைவிட வேண்டும்?**

கல்வி தொடர்பான அனைத்து அதிகாரங்களையும் தில்லியில் குவிக்க தேசியக் கல்வி ஆணையத்தின் கீழ் தேசிய தேர்வு முகமை போன்ற அமைப்புகள் உருவாகக்கப்படும் என்றும், பட்டப்படிப்பு, பட்டயப் படிப்பு, உயர்கல்வி, தொழிற்கல்வி போன்ற அனைத்திற்கும் இனி அனைத்திந்தியத் தேர்வு உண்டு என்றும் வரைவறிக்கை கூறுகிறது. இதன் மூலம் ஏழை எளிய கிராமப்புற மாணவர்கள் கல்லூரி படிப்புகளை படிக்க முடியாத நிலை ஏற்பட்டுவிடும். இந்தியா போன்ற பலமொழி, பல இனம், பல பண்பாடுகள் கொண்ட சூழலுக்கு இது போன்ற ஒற்றைத் தேர்வு முறை ஏழை எளிய கிராமப்புற மாணவர்கள் மீது தொடுக்கப்படும் வன்முறையே ஆகும். அது அவர்களுக்கான அடிப்படை கல்வி உரிமையை மறுப்பதாகும். எனவே அனைத்திந்திய தேர்வு முறையை கைவிட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறோம்.

**8. ஏழை மற்றும் கிராமப்புற மாணவர்களை கருத்தில் கொள்ளாமல் தயாரிக்கப்பட்டுள்ள புதிய கல்விக் கொள்கை**

ஒரு கல்விக் கொள்கையின் நோக்கமானது சமமான, தரமான உயர்கல்விக்கான வாய்ப்பை சகலருக்கும் தருவதாக இருக்க வேண்டும். அதற்காக நகர்ப்புற, கிராமப்புற வேறுபாடின்றி, பணக்காரன், ஏழை வித்தியாசமின்றி, சாதி, மத பாகுபாடின்றி அனைவரையும் நோக்கி அது செல்வதாக இருக்க வேண்டும். ஆனால் இந்த புதிய கல்விக் கொள்கையோ பெரிய, பல்துறை உயர் நிறுவனங்கள் என்ற பெயரில் சாமானியர்களுக்கு முன்பிருந்த வாய்ப்பையும் கெடுப்பதாக உள்ளது. மொத்தத்தில் இந்த கல்விக் கொள்கை ஏழை எளிய கிராமப்புற மற்றும் அடித்தட்டு மக்களை மனதில் கொண்டு தயாரிக்கப்படவில்லை என்பது தெளிவாகத் தெரிகிறது. இது அரசியலமைப்பு சட்டம் சொல்லும் சமத்துவ கல்வி உரிமைக்கு எதிரான போக்காகும். இந்த புதிய தேசியக் கல்விக் கொள்கை ஏழை மற்றும் கிராமப்புற மாணவர்களை, மக்களைக் கருத்தில் கொண்டு தயாரிக்கப்படவில்லை. எனவே இதை மறுபரிசீலனை செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறோம்.

**9. சமூகநீதி மற்றும் இடஒதுக்கீட்டுக்கு எதிரான கல்விக் கொள்கை**

இந்த புதிய கல்விக் கொள்கை உயர்கல்வியில் மாணவர் சேர்க்கையை அறிமுகப் படுத்துவதற்கு பதிலாக அதை குறைக்கும் நோக்கத்தை கொண்டுள்ளதாக நாங்கள் கருதுகிறோம். தரத்தின் பெயரால் மாணவர்களுக்கு மட்டுமல்ல ஆசிரியர்களுக்கும் அநீதி நேரும் ஆபத்து இதில் உள்ளது. 'பேராசியர்களது நியமனம், பணிக்காலம், பதவி உயர்வு எல்லாம் தரத்தின் அடிப்படையில் இருக்கும்' என்கிறது வரைவு. தரம் முக்கியம்தான் என்றாலும் தரத்தின் பெயரால் சமூகநீதியை பலியிட்டுவிடக்கூடாது. இந்த வரைவானது அரசியல் சாசனம் வகுத்துள்ள இடஒதுக்கீடு குறித்து எதுவும் பேசவில்லை என்பது அதிர்ச்சிகரமானதாக உள்ளது. எனவே சமூகநீதி இடஒதுக்கீடு போன்றவற்றிற்கு இடமளித்து தாழ்த்தப்பட்ட பிற்படுத்தப்பட்ட மாணவர்கள் கல்வி வேலைவாய்ப்புகளில் முன்னேற்றம் காணும் வகையில் வரைவறிக்கையில் மாற்றம் செய்யப்பட வேண்டும்.

**10.கல்வி உரிமைச் சட்டத்திற்கு எதிரான புதிய கல்விக் கொள்கை**

குறைந்த எண்ணிக்கையிலான மாணவர்களைக் கொண்ட கிராமப்புற பள்ளிகளை மூடிவிட்டு பள்ளித்தொகுதிகள் உருவாக்குவது எப்படி என்பதைக் கூறுகிறது இந்த வரைவறிக்கை அதாவது 20 குழந்தைகளுக்கு குறைவாக படிக்கும் பள்ளிகளை 'பொருளாதார சாத்தியம் இல்லாத பள்ளிகள்' என்று வகைப்படுத்தி அவற்றை மூடிவிடவும் அதற்கு மாற்றாக பல கிலோமீட்டர் தொலைவில் ஒரு கூட்டுப்பள்ளி வளாகம் ஏற்படுத்தி அங்கே குழந்தைகளை படிக்க வைக்கலாம் என்றும் ஆலோசனை கூறுகிறது வரைவறிக்கை. கிராமப்புறத்தில் உள்ள ஏழை எளிய மக்கள் தங்கள் பிஞ்சுக் குழந்தைகளை சில கிலோமீட்டர்கள் தாண்டி அமைக்கப்பட்டுள்ள கூட்டுப்பள்ளிக்கு அனுப்புவது சாத்தியமில்லாத விஷயம் இதனால் கிராமப்புற குழந்தைகள் கல்வியறிவு பெற முடியாத அநீதி நிகழ வாய்ப்புள்ளது. இதன்மூலம் அருகாமைப்பள்ளி-ஆரம்பப்பள்ளி ஒரு கிலோ மீட்டர் தொலைவிலும், உயர்நிலைப்பள்ளி மூன்று கிலோ மீட்டர் துாரத்திற்குள்ளும் இருக்க வேண்டும் என்ற கல்வி உரிமை சட்டம் வலியுறுத்தும் கோட்பாடு குழிதோண்டி புதைக்கப்பட்டுள்ளது. எனவே கூட்டுப்பள்ளி அமைக்கும் பரிந்துரையை கைவிட்டுவிட்டு அனைத்து கிராமங்களிலும் ஒரு பள்ளிக்கூடமும் அதற்கான ஆசிரியர்களும் அமைவதை உறுதி செய்யும் வகையில் புதிய கல்விக் கொள்கை திட்டத்தில் திருத்தம் மேற்கொள்ளப்பட வேண்டும்.

**11. பண்பாட்டு மொழி பெயரில் சமஸ்கிருத திணிப்பு**

ஒருசில நுாறு பேர் மட்டுமே பேசக்கூடிய சமஸ்கிருத மொழியை இந்தியாவின் பண்பாட்டு ஒற்றுமைக்கு உரிய மொழி என்று புதிய கல்விக்கொள்கை வரைவறிக்கையில் சமஸ்கிருத மொழியை கட்டாயமாக்கியிருக்கிறார்கள். பல மொழிகள், பண்பாடுகள், தேசிய இனங்களை உள்ளடக்கிய இந்தியா போன்ற துணைக் கண்டத்தில் சமஸ்கிருத மொழியை பண்பாட்டு மொழியாக திணிப்பது இந்திய ஒற்றுமைக்கும் ஒருமைப்பாட்டுக்கும் ஊறு விளைவிக்கும் செயலாகும். சமஸ்கிருதம் வடமொழி அறிவுக்களஞ்சியமாகத் திகழ்கிறது என்று கூறுவது செம்மொழித் தமிழ், சுந்தரத்தெலுங்கு, வங்கமொழி போன்ற தனித்தன்மை கொண்ட மொழிகளை இழிவுபடுத்தியிருப்பதாகவே கருதவேண்டியுள்ளது. இது மொழி பேதங்களை ஏற்படுத்தி விடும். இந்திய அரசு எல்லா மொழிகளையம் சமமானதாகவே பார்க்க வேண்டும். எனவே பண்பாட்டு மொழி என்பதை பண்பாட்டு

மொழிகளாக மாற்றி இந்தியாவில் சிறப்புமிக்க தனித்தன்மை வாய்ந்த மொழிகளை பண்பாண்டு மொழிகளாக அறிவிக்க வேண்டும். பண்பாட்டு மொழிகளில் ஏதேனும் ஒன்றை தங்கள் விருப்பப்படி மாணவர்கள் தேர்ந்தெடுத்துக் கொள்ளட்டும். இல்லாவிட்டால் இந்தி திணிப்பு போல சமஸ்கிருத திணிப்பாகவே மக்கள் இதை கருத வேண்டி வரும்.

**12.மூன்று வயதிலிருந்தே கட்டாயக் கல்வி என்பது அங்கீகரிக்கப்பட்ட குழந்தை வன்முறையாகிவிடும் ஆபத்து**

முன் மழலைக் கல்வியிலிருந்தே பள்ளிக் கல்வி தொடங்குவதாக தேசியக் கல்விக் கொள்கை வரையறுக்கிறது. மூன்று வயது முதலே கட்டாயக் கல்வி என்பது குழந்தை உரிமைகளுக்கு எதிரான ஒன்றாகும். மூன்று வயதிலேயே குழந்தைகளுக்கு கல்வி கற்பிக்க வேண்டும் என்பது குழந்தைகள் மீது தொடுக்கப்படும் மிகப்பெரிய வன்முறையாகும். எனவே ஐந்து வயதிலிருந்தே கட்டாய கல்வி என்ற முந்தைய நடைமுறையே தொடர வேண்டும். முன் மழலைக் கல்வியை நிர்ப்பந்திக்க கூடாது என்பது எங்கள் கருத்தாகும்.

**13.வர்ணாசிரமக் கல்வியின் நீட்சியா? அல்லது ஆர்எஸ்எஸ் கொள்கையின் நகலா? தேசிய புதிய கல்விக் கொள்கை?**

தொழில்முறைக் கல்வியும் மாணவர்களின் திறன்களும் பற்றிப் பேசும் இக்கல்விக் கொள்கை 3 முதல் 8 வயது குழந்தைகளுக்கு தோட்டக்கலை, மண்பாண்டம் செய்தல், மரவேலை போன்றவற்றை கற்றுத்தரவும் 6 முதல் 8 ஆம் வகுப்பு மாணவர்களுக்கு தொழில்முறை கற்பித்தல் பற்றியும் பேசுகிறது. இது மீண்டும் குலக்கல்வி முறையை அறிமுகப்படுத்தும் நோக்கில் கொண்டு வரப்படுகிறதோ என்ற ஐயப்பாடு எழுகிறது. தொழில்முறை கற்பித்தல் பயிற்சி வர்ணாசிரமக் கல்வியின் நீட்சி இல்லை என்பதை தெளிவுபடுத்த வேண்டும். அதே போல 1500க்கும் மேற்பட்ட மொழிகள் பேசப்படுகிற ஒரு நாட்டில் சமஸ்கிருத மொழியை பண்பாட்டு மொழியாக அறிவித்திருப்பதும், மூன்றாம் மொழியாக இந்தி மொழியை திணிக்க முயற்சிப்பதும் ஆர்எஸ்எஸ் கொள்கையின் நகல் புதிய கல்விக் கொள்கையின் சாராம்சமாக புகுத்தப்பட்டிருக்கிறதோ என்ற ஐயப்பாடும் எங்களுக்கு உள்ளது. புதிய கல்விக்கொள்கை எந்த மதத்தையும் அடிப்படையாக கொள்ளாமல் எந்த மதத்திற்கும் ஊறு விளைவிக்காமல் நடுநிலைமையுடன் உருவாக்கப்பட்டுள்ளது என்கிற உத்தரவாதத்தை புதிய கல்விக் கொள்கை மக்களுக்கும் மாணவர்களுக்கும் தர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறோம்.

**14. ஒரே கல்விக் கொள்கை – ஒரே பாடத்திட்டம் மட்டுமே அனைவருக்கும் சமமான கல்விக்கு உத்தரவாதமளிக்கும்**

ஒரே தேசம் ஒரே தேர்தல் என்று ஆரம்பித்து ஒரே தேசம் ஒரு ரேஷன் என்று விரிந்து ஒரே தேசம் ஒரே கல்விக் கொள்கை என்ற அளவிற்கு வந்துவிட்ட மத்திய அரசு ஒரே கல்விக் கொள்கை ஒரே பாடத்திட்டம் என்பதை ஒப்புக்குக்கூட ஒப்புக்கொள்ளவில்லை. உயர்கல்வி பயில செல்பவர்களுக்கு அகில இந்திய நுழைவுத்தேர்வு கட்டாயம் என வலியுறுத்தும் இந்த வரைவறிக்கை பல்வேறு பாடத்திட்டங்களின் கீழ் பயிலும் மாணவ மாணவியரின் நலன் கருதி அவற்றை ஒரே பாடத்திட்டம் என்ற குடையின் கீழ் கொண்டு வராதது கல்வித்துறையில் உள்ள வணிகநோக்கத்திற்கு அது வளைந்து கொடுத்துள்ளதோ என்கிற வகையில்தான் பார்க்க வேண்டியுள்ளது. பலவித பாடத்திட்டங்களின் கீழ் படித்து தேர்ச்சி பெறும் மாணவர்கள் நீட் தேர்வுக்கு என்சிஆர்டி பாடத்திட்டத்தின் அடிப்படையில் நுழைவுத்தேர்வு எழுத வேண்டும் என்று நிர்ப்பந்திப்பது எந்தவகையில் நியாயமில்லையோ, அதேபோல இப்போது பன்னிரெண்டாம் வகுப்பு முடித்த மாணவர்கள் எந்த பாடத்திட்டத்தின் கீழ் நுழைவுத் தேர்வு எழுதுவார்கள் என்பதை வரைவறிக்கை விளக்கவில்லை. பல்வேறு பாடத்திட்டங்களின் கீழ் படிக்க அனுமதியளித்துவிட்டு ஒரு பாடத்திட்டத்தின் கீழ் நுழைவுத் தேர்வு எழுதச்சொல்வது எந்த வகையிலும் நியாயமற்றது என்பதை உணர்ந்த பின்னரும் எல்லோருக்கும் ஒரே மாதிரியான பாடத்திட்டத்தை கொண்டுவரத் தவறியிருப்பது தேசியக் கல்விக் கொள்கையில் உள்ள மிகப்பெரிய ஓட்டையாகும். ஆக, அனைவருக்கும் முறையான கல்வி, ஒரேமாதிரியான பாடத்திட்டம் என்பது ஆரம்பநிலையிலிருந்தே சரி செய்யப்பட வேண்டிய ஒன்றாகும். அப்போதுதான் எல்லோருக்கும் சமமான கல்வி சாத்தியமாகும். இந்த குறைபாட்டை புதிய தேசிய கல்விக் கொள்கைளை சீரமைக்கும் போது கண்டிப்பாக கவனத்தில் கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறோம்.

இந்த கல்விக் கொள்கையை ஆழ்ந்து படித்ததன் மூலம் தெரிய வரும் உண்மை யாதெனில் பணம் இருந்தால் படிக்கலாம் இல்லையேல் தற்கொலை செய்து கொள்ளலாம் என்கிற நிலைக்கு தள்ளிவிடும் ஆபத்தை கொண்டுள்ளதாகத் தெரிகிறது. இந்தக் கல்விக் கொள்கையை நடைமுறைப்படுத்தினால் இந்திய நாட்டில் உள்ள கோடிக்கணக்கான ஏழை எளிய மக்களுக்கு கல்வி கேள்விக்குறியாகிவிடும். இது மாநில அரசுகளின் உரிமைகளைப் பறிப்பதோடு, பணமும், பவிசும் உள்ளவர்களுக்குத்தான் கல்வி என்ற நிலையைத் தோற்றுவித்துவிடும் என்பது நிதர்சனமாகத் தெரிகிறது.

எங்களைப் போன்ற சமூக சிந்தனை உள்ளவர்கள் கல்வியாளர்களின் கருத்துக்களைக் கேட்டு விமர்சனங்களை உள்வாங்கி மற்றவர்கள் தெரிவிக்கும் நியாயமான மாற்றங்களை புதிய கல்விக் கொள்கையில் ஏற்படுத்தி மத்தியஅரசு எல்லோருக்கும் சமமான கல்வி கிடைக்க வழிவகை செய்ய வேண்டும். இல்லையேல் இந்தியாவில் உள்ள சமூக ஆர்வலர்கள், கல்வியாளர்கள், அறிவு ஜீவிகள், ஆசிரியர்கள், மாணவர்கள் மற்றும் பொதுமக்கள் ஆகியோர் ஒன்றுசேர்ந்து வீதிகளில் இறங்கி சமூகநீதிக்காகவும் சமமான கல்விக் கொள்கைக்காகவும் போராட்டங்களை முன்னெடுக்க வேண்டியதிருக்கும் என்பதை மத்திய அரசுக்கு இதன்மூலம் உணர்த்த கடமைப் பட்டுள்ளோம். ❖



# தோழர் ஆர்.எம்.எஸ். அவர்களின் 2ஆம் ஆண்டு நினைவேந்தல் கூட்டமும் கருத்தரங்கமும்

## தேசிய கல்விக் கொள்கை வரைவு 2019 ஏன் எதிர்க்க வேண்டும்?

தமிழ்நாடு அரசு ஊழியர் சங்க முன்னாள் மாநில பொதுச் செயலாளரும், அகில இந்திய மாநில அரசு ஊழியர் சம்மேளன அகில இந்திய தலைவராக இருந்து செயல்பட்ட இரா.முத்து சுந்தரம் அவர்களின் 2ஆம் ஆண்டு நினைவேந்தல் தினத்தை முன்னிட்டு அரசு ஊழியர் சங்க மாநில செயற்குழுவின் முடிவின்படி மாவட்ட மையம் சார்பில் 29.07.19 அன்று மாலை நேர கருத்தரங்கம் நடத்திட வேண்டும் என முடிவு எடுக்கப்பட்டது.

### காஞ்சிபுரம்

செங்கற்பட்டில் மாவட்டத் தலைவர் வெ.லெனின் தலைமையில் நடைபெற்றது. மாவட்டச் செயலாளர் சா.முகம்மது உசேன் வரவேற்றார். கருத்தரங்கில் தமிழ்நாடு அறிவியல் இயக்கத்தின் சார்பில் முனைவர் என்.மாதவன் கருத்துரையாற்றினார். மாவட்ட பொருளாளர் எம்.என்.ஸ்ரீராம் நன்றி கூறினார்.

### நாகை

அரசு ஊழியர் சங்கக் கட்டிடத்தில் மாவட்டத் தலைவர் ப.அந்துவன் சேரல் தலைமையேற்றார். மாவட்டச் செயலாளர் ஏ.ட்டீ.அன்பழகன் வரவேற்றார். தமிழ்நாடு நகராட்சி ஆணையரக அனைத்து ஊழியர்கள் சங்க மாநிலத் தலைவர் கி.இரகுராமன் இரா.முத்துசுந்தரம் - புதைக்கப்பட வில்லை என்ற தலைப்பில் கருத்துரையாற்றினார். தமிழ்நாடு மற்றும் பாண்டிச்சேரி பள்ளிக் கல்வி பாதுகாப்பு இயக்கத்தின் செயலாளர் ஜெ.கிருஷ்ணமூர்த்தி கருத்துக்களை எடுத்துரைத்து அதனை எதிர்க்க வேண்டியதன் அவசியத்தை எடுத்துரைத்தார். மாவட்ட துணைத் தலைவர் எஸ்.ஜோதிமணி நன்றியுரையாற்றினார்.

### திண்டுக்கல்

மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் மாவட்ட தலைவர் விஜயகுமார் தலைமையில் நடைபெற்றது. மாவட்ட செயலாளர் முபாரக் அலி வரவேற்றார். மாநில துணை தலைவர் மொ.ஞானத்தம்பி கருத்துரை ஆற்றினார். பொருளாளர் ராஜேந்திரன் நன்றி கூறினார்.

### கரூர்

தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கக் கட்டிடத்தில் நடைபெற்ற கருத்தரங்கத்திற்கு மாவட்டத் தலைவர் மு.மகாவிஷ்ணன் தலைமையேற்றார். செயலாளர் கே.சக்திவேல் வரவேற்றார். மாநில துணைத் தலைவர் மு.சுப்பிரமணியன், தமுகஎச மாநில துணைத் தலைவர் கவிஞர் நா.முத்து நிலவன் ஆகியோர் கருத்துரையாற்றினர். பொருளாளர் பொன்.ஜெயராம் நன்றி கூறினார்.

### தருமபுரி

சிஐடியு அலுவலகத்தில் மாவட்டத் தலைவர் எம்.சுருளிநாதன் தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் பெண்கள் உள்ளிட்ட அரசு ஊழியர்கள் பங்கேற்றனர்.

### கிருட்டிணகிரி

மாவட்ட தலைவர் சந்திரன் தலைமையில் நடைபெற்றது. கருத்தரங்கில் பாரதி புத்தகாலயத்தின் பத்ரி பங்கேற்று உரையாற்றினார். இதில் 18 பெண்கள் உட்பட 52 பேர் கலந்து கொண்டனர்.

### மதுரை

மாவட்டத் தலைவர் சு.ஜெயராஜராஜேஸ்வரன் தலைமையில் நடைபெற்ற கருத்தரங்கத்திற்கு வந்திருந்தவர்களை மாவட்டச் செயலாளர் க.நீதிராஜா வரவேற்றார். மாநிலத் தலைவர் (பொ) ஆ.செல்வம் விளக்கவுரையாற்றினார். பேரா. பி.விஜயக்குமார் தேசியக் கல்விக் கொள்கை-2019 குறித்து விளக்கவுரையாற்றினார். மாவட்ட பொருளாளர் (பொ) மு.ராமதாஸ் நன்றி கூறினார்.

### வடசென்னை

தங்கசாலை பகுதியில் உள்ள ஐடிஐ வளாகத்தில் நடைபெற்றது. கல்வியாளர் பிரின்ஸ் கஜேந்திரபாபு, மு.அன்பரசு ஆகியோர் உரை யாற்றினர். மாவட்டத் தலைவர் ம.அந்தோணி சாமி தலைமையேற்ற, மாவட்டச் செயலாளர் வரவேற்றார். ❖

# மார்க்சுக்காகவே வாழ்ந்த எங்கெல்ஸ்

பெரணமல்லூர் சேகரன்



**பி**ரெட்ரிக் எங்கெல்சு 19ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த ஜெர்மன் அரசியல் மெய்யியலாளராவார். இவர் கார்ல் மார்க்ஸ் உடன் இணைந்து கம்யூனிச சித்தாந் தத்தை உருவாக்கியதுடன், கம்யூனிஸ்ட் கட்சி அறிக்கையை மார்க்சுடன் சேர்ந்து எழுதினார்.

எங்கெல்ஸ் பிரஸ்யாவி லுள்ள பர்மன் என்னு மிடத்தில் 1820ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 28ஆம் நாள் பிறந்தவர். 20 அகவை வரை வணிகத்தில் ஈடுபட்டார். சிறுவனாக இருக்கும் பொழுதே மதங்களின் மீதும் முதலாளித்துவத்தின் மீதும் வெறுப்பு கொண்டிருந்தார். இக்காலக்கட்டத்தில் பெர்னிலுள்ள மெய்யியல் அறிஞர் ஹேகல் கொள்கையைப் பின்பற்றுபவர்களோடு தொடர்பிலிருந்தார். மான்செஸ்டரில் தன்னுடைய தந்தையின் நூற்பு ஆலையில் 1845ஆம் ஆண்டு வேலை செய்த பொழுது தொழிலாளர்களின் மேல் முதலாளித்துவத்தின் வரையற்ற அடிமைத் தனத்தை நேரடியாக உணர்ந்தார்.

ஜெர்மனி செல்லும் வழியில் பாரீசில் கார்ல் மார்க்சை சந்தித்து நட்பை வளர்த்துக் கொண்டார். காரல் மார்க்சும், பிரடெரிக் எங்கெல்சும் 10 நாட்கள் தொடர்ந்து பேசிக் கொண்டனர் எனில் அவ்வுரையாடலின் பெரும்பகுதி மனிதகுல விடுதலைக்கான மகத்தான பணி குறித்துதான். அன்று துவங்கிய சந்திப்பு இறுதி வரை தொடர்ந்தது.

1849இல் ஜெர்மனியிலிருந்து தப்பி இங்கிலாந்து வந்து கார்ல் மார்க்சுக்கு உதவத் தொடங்கினார். பணமின்றி துயரப்பட்டுக் கொண்டிருந்த மார்க்சுக்கு உதவுதற்காகவே மீண்டும் தன் தந்தையின் நூற்பு ஆலையில் வேலை செய்தார். 1869 சூலை 1 அன்று தனது ஆலையின் பங்கை விற்றார். அதை ஒரு மிகப்பெரிய மகிழ்ச்சியான நாளாகக் கருதினார். தமது சொத்தை நான்காகப் பிரித்து ஒரு பங்கை மார்க்சின் குழந்தைகளுக்கு எழுதி வைத்தார் எங்கெல்ஸ். காரல் மார்க்ஸ் நோயுற்ற போதெல்லாம் அவரை அழைத்துச் சென்று சிகிச்சை மேற்கொள்ளச் செய்து மீள அழைத்து வந்து வீட்டில் விட்டுச் செல்வார் எங்கெல்ஸ்.

மார்க்ஸ் உடல் நலிவுற்றிருந்த சமயத்தில் மார்க்சின் மனைவி ஜென்னி இறந்துவிடுகிறார். ஜென்னியின் சவ அடக்கத்துக்கு காரல் மார்க்ஸ் செல்ல இயலாத நிலையில் எங்கெல்ஸ்தான் ஜென்னியின் சவ அடக்கத்தைச் செய்கிறார். அப்போது மார்க்சின் கடிதத்தை எங்கெல்ஸ் வாசிக்கிறார். இறுதியில் எங்கெல்ஸ் தமது உரையில் "ஜென்னி இறந்ததும் மார்க்சும் இறந்துவிட்டார்" எனக் குறிப்பிடுகிறார்.

1870 செப்டம்பரில் மார்க்சுக்கு அதிகமாக ஒத்துழைக்க எண்ணி மார்க்சின் இல்லத்தருகிலேயே வந்து தங்கினார். தன்னை முன்னிலைப் படுத்தாமல் மார்க்சை முன்னிலைப்படுத்தினார் எங்கெல்சு. மார்க்சின் கருத்துக்களை வளமுள்ளதாக்க அவ்வப்போது உறவாடி பல புதிய கருத்துக்களையும் மார்க்சுக்குக் கொடுத்தார்.

முதலாளித்துவமானது தொழிலாளிகளுக்கு வேலை பாதுகாப்பின்மையை உருவாக்கி உள்ளது. தன் வாழ்க்கை என்னவாகுமோ என்ற பயத்தை உண்டாக்கியுள்ளது என்பதைத் தமது படைப்புகள் மூலம் நிறுவினார் எங்கெல்ஸ்.

"குடும்பம், தனிச்சொத்து, அரசு ஆகியவற்றின் தோற்றம்", "வரலாற்றில் முதலாளியமும் மதமும்", "கம்யூனிசத்தின் கோட்பாடுகள்", "கற்பனவாத சோசலிசமும் விஞ்ஞான சோசலிசமும்", "குடும்பம் தனிச்சொத்து அரசு ஆகியவற்றின் தோற்றம்", "மனிதக் குரங்கு மனிதனாக மாறியதில் உழைப்பின் பாத்திரம்", "இயற்கையின் இயக்க இயல்", "டூரிங்குக்கு மறுப்பு" ஆகியவை பிரடெரிக் எங்கெல்சின் மகத்தான நூல்கள்.

1848ஆம் ஆண்டு காரல் மார்க்சும் பிரடெரிக் எங்கெல்சும் இணைந்து வெளியிட்ட

'கம்யூனிஸ்ட் கட்சி அறிக்கை' உலகப் புகழ் வாய்ந்தது.

இந்நூல் உலகில் 200 மொழிகளில் வெளியிடப் பட்டது. இந்நூலை அடிப்படையாகக் கொண்டு உலகின் முதல் புரட்சியாக ரஷ்யப்புரட்சி வரலாறு படைத்தது.

எங்கெல்ஸ் மூலமாகவே காரல் மார்க்ஸ் எழுதிய அனைத்து நூல்களும் வெளியிடப் பட்டன. எங்கெல்ஸ் இல்லையேல் மார்க்சின் மகத்தான நூல்கள் வெளி வந்திருக்க வாய்ப் பில்லை. காரல் மார்க்சின் புகழ்பெற்ற 'மூலதனம்' நூலின் முதல் தொகுதி மட்டுமே மார்க்சின் வாழ்நாளில் வெளியிடப்பட்டது. மற்ற மூன்று தொகுதிகளும் மார்க்சின் மறைவிற்குப் பின் எங்கெல்சின் பெரு முயற்சியால் வெளியிடப் பட்டன.

பிரடெரிக் எங்கெல்ஸ் காரல் மார்க்சுக்காகவே வாழ்ந்தார் எனின் மிகையன்று. எனவேதான் மார்க்சின் அஸ்தியைக் கடலில் தூவிவிட்டு மார்க்சின் இறுதி மகள் 'எங்கெல்சும் எனது தந்தை தான்' என்றார்.

காரல் மார்க்சின் தொடர்பு இல்லாமல் போயிருந்தால் எங்கெல்ஸ் தொழிலதிபராகக்கூட மாறியிருக்கலாம். எங்கெல்சுக்கு மதத்தின் மீது நம்பிக்கை இல்லை. அக்காலத்தில் திருச்சபையில் திருமணம் கட்டாயமாகப் பதிவு செய்யப்பட வேண்டும். ஆனால் எங்கெல்ஸ் அவ்வாறு செய்யாமல் தான் விரும்பிய மேரியுடன் சேர்ந்து வாழ்ந்தார். "எனக்காக திருமணத்தைப் பதிவு செய்யுங்கள்" என வேண்டினார் மேரி. பதிவு செய்த மறுநாளே மேரி மறைந்தார்.

காரல் மார்க்சின் இறுதி ஊர்வலம் பிரடெரிக் எங்கெல்சுடனான 14 பேருடன் முடிவடைந்தது. இலண்டன் ஹைகேட் சிமெட்ரியில் புதைக்கப் பட்டபோது பிரடெரிக் எங்கெல்ஸ் ஆற்றிய உரை அர்த்த அடர்த்தி மிக்கது.

மார்க்ஸ் வரலாறை எங்கெல்ஸ் இல்லாமல் எழுத முடியாது. எங்கெல்ஸ் வரலாறை மார்க்ஸ் இல்லாமல் எழுத முடியாது. அத்தகைய தோழமை வாழ்வை வாழ்ந்தனர் மார்க்ஸ்-எங்கெல்ஸ் இருவரும். மனிதகுல விடுதலைக் காகத் தங்கள் வாழ்வை அர்ப்பணித்துக் கொண்ட காரல் மார்க்ஸ், பிரடெரிக் எங்கெல்ஸ் இருவருமே என்றென்றும் மனிதகுல வரலாற்றில் நிலைத்திருப்பர்.

இங்கிலாந்து ஏழை பாட்டாளி வர்க்கத்தின் அவலம் பற்றி எங்கெல்ஸ் எழுதிய நூலான "இங்கிலாந்து உழைக்கும் வர்க்க மக்களின் நிலைமை" 19ஆம் நூற்றாண்டில், இங்கிலாந்தின் நகரங்களில் இருந்த சேரிகளில் வாழ்ந்த ஏழை மக்களின் அவல வாழ்க்கை பற்றிப் படம் பிடித்துக் காட்டுகிறது. இதை விட சிறப்பாக வேறெந்த நூலிலும் அக்காலத்திய இங்கிலாந்து நாட்டின் தொழிலாளி வர்க்கத்தைப் பற்றிய கருத்துக்கள் இடம் பெறவில்லை.

பிரடெரிக் எங்கெல்ஸ் காரல் மார்க்சுக்காகவே வாழ்ந்து அவரது நூல்களை மனிதகுலத்திற்கு வழங்கி மகத்தான பணியை முடித்து 1895ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 5 ஆம் நாள் மறைந்தார்.

**(எங்கெல்ஸ் நினைவு நாள் ஆகஸ்ட் 5)**

# படத்திறப்பு மற்றும் நினைவு நூலகம்

மதுரை மாவட்டத்தில் மாவட்டத் தலைவராக பொறுப்பு வகித்த மு.முருகன் கடந்த 19.6.2019 அன்று மரணமடைந்தார். அன்னாரின் படத்திறப்பு மற்றும் அவர் படித்து பயன்படுத்திய புத்தகங்களை அவருடைய குடும்பத்தார் சங்கத்திற்கு வழங்கியதைக் கொண்டு மதுரை மாவட்ட சங்கக் கட்டிடத்தில் அவர் பெயருடன் கூடிய நினைவு நூலகம் ஏற்படுத்தப்பட்டது. இந்நிகழ்வுக்கு மாவட்டத் தலைவர் சு.ஜெயராஜராஜேஸ்வரன் தலைமையேற்றார். மாவட்டச் செயலாளர் நீதிராஜா வரவேற்றார். சிஐடியு மாவட்ட துணைத் தலைவர் சுப்பையா, ஜாக்டோ-ஜியோ ஒருங்கிணைப்பாளர் சந்திரன், துறைவாரி சங்க நிர்வாகிகள் ஜெயச்சந்திரன், சோ.நடராஜன், கிருஷ்ணன், பாண்டியம்மாள், நூர்ஜஹான், மகாலிங்கம் ஆகியோர் வாழ்த்தி பேசினர். மாநில துணைத் தலைவர் மொ.ஞானத்தம்பி நினைவுகளை பகிர்ந்தார். முருகன் திருவுருவப் படத்தை மாநில பொறுப்பு தலைவர் ஆ.செல்வம் திறந்து வைத்து அஞ்சலி செலுத்தினார். நூலகத்தை மதுரை மக்களவை உறுப்பினர் சு.வெங்கடேசன் திறந்து வைத்தார். மாவட்ட பொருளாளர் ராமதாஸ் நன்றி கூறினார்.

சிறுகதை

# வெள்ளத் தனைய மலர் நீட்டம்...

பெரணமல்லூர் சேகரன்

**கீ**தாவுக்கு இன்று உறக்கம் போக்கு காண்பித்தது. எவ்வளவோ முயன்றும் தோல்வியையே தழுவினாள். உறக்கம் கண்களைத் தழுவ மறுத்தன. அலுவலகத்தைச் சுற்றிய சம்பவங்கள் அடுக்கடுக்காக வந்து வந்து போவதாகவே இருந்தன.

சக ஊழியர்கள், அதிகாரிகள், அரசியல்வாதிகள் என படையெடுத்து வந்த வண்ணம் இருந்தனர். ஊராட்சி ஒன்றியம் என்றால் சொல்ல வேண்டியதே இல்லை. எந்நேரமும் பத்துப் பதினைந்து பேர் பொதுமக்கள் கட்டாயமாக இருப்பார்கள். உள்ளாட்சிப் பிரதிநிதிகள் இரண்டு ஆண்டுகளாக இல்லாத நிலையில் முன்னாள் பிரதிநிதிகள் விரல் விட்டு எண்ணக்கூடிய அளவில்தான் வருவ துண்டு. எனினும் அவர்களின் கேள்விகளுக்கு மணியனின் பதில்கள் மென்மையாக இருப்பதைப் பலமுறை பார்த்து கீதா வியந்ததுண்டு. இன்னும் சாதாரண பொதுமக்கள் என்றால் அவர்களிடம் கரிசனம் காட்டிப் பேசுவதைப் பார்க்க முடியும். இதனால் பெரும்பாலான ஊழியர்கள் மணியனிடம் மக்களை பதிலுக்காக அனுப்பி விடுவது வழக்கமாகிவிட்டது.

சங்கப் பிரச்சினையாக இருக்கட்டும், அரசியல் பிரச்சனையாக இருக்கட்டும் ஊழியர்களின் நலன் குறித்ததாக இருக்கட்டும் எதிலும் மணியனின் நிதானமான அணுகுமுறை கீதாவுக்கு பிடித்துப் போன ஒன்று.

அலுவலக வேலையையும் சரியாக செய்து கொண்டு சங்க நிர்வாகியாகவும் இருந்து கொண்டே சகலகலா வல்லவனைப் போன்று மணியன் செயல்படுவதாகவே உணர்ந்தாள் கீதா.

ஜாக்டோ ஜியோ போராட்டம் தோல்வியில் பயணிப்பது போல் எல்லோருமே விரக்தியின் விளிம்பில் நின்றுகொண்டு பேசினாலும் மணியனின் மணியான வார்த்தைகள் நம்பிக்கையையும் உற்சாகத்தையும் அளிப்பதாகவே உணர்ந்தாள். கீதா மட்டுமல்ல அலுவலகமே அந்த ஒற்றை மனிதனுக்குக் கட்டுப்பட்டு வேலை நிறுத்தம் செய்து வந்தது. வேலை நிறுத்தமாகவோ அல்லது வேறெந்தப் போராட்டமாகவோ இருந்தாலும் மணியனின் வழிகாட்டுதலையே எதிர்நோக்குவது சில நேரங்களில் கீதாவுக்கே வியப்பாக இருக்கும்.

மணியனின் நேர்மையும் வாய்மையும் நம்பகத் தன்மையை ஊழியர்கள் மற்றும் அதிகாரிகள் மத்தியில் ஏற்படுத்தி இருந்தன. இது கீதாவின் மனதில் மணியனுக்கான நீங்கா இடத்தைக் கொடுத்து விட்டது.

அலுவலகத் தலைவரான பி.டி.ஓ அணுகுமுறை தவறான பாதையில் பயணிக்கும் காலங்களில் அதைச் சரிசெய்ய சாதுர்யமாகப் பேசி சரி செய்வதில் மணியனுக்கு நிகர் மணியனே.

அலுவலகத்தில் ஒவ்வொருவரும் ஒவ்வொரு விதமான குணம் கொண்டவர்களாகவே இருந்தனர். கீதாவின் கோப்புகளைப் பார்க்கும் அதிகாரி எதையும் எதிர்பார்த்து கையெழுத்துப் போடும் பேர்வழி. பக்கத்து சீட்டுக்கார உதவியாளரோ ஜொள்ளுப் பார்ட்டி. கணினி உதவியாளர்களில் சிலர் மட்டுமே ஒழுங்காக வேலை செய்து வந்தனர். சிலரின் நடவடிக்கை இவளுக்கே எரிச்சலைக் கொடுக்கும். பொறியியல் பிரிவில் வேலை பார்ப்பவர்கள் 'நானே ராஜா நானே மந்திரி பாணி'.

எதிர் சீட்டில் வேலை பார்க்கும் உதவியாளர் மணியன் மட்டுமே எப்போதும் நேரத்தை வீணடிக்காமல் அலுவலகப் பணிகளை முடிப்பதும் உணவு இடைவேளையின்போது சங்க செய்திகளை அனைவருடன் பரிமாறிக் கொள்வதும் அவ்வப்போது எழும் பிரச்சனைகளுக்குத் தீர்வு காண்பதென இயங்கிக் கொண்டே இருந்தான்.

ஆறு நாட்களாகப் போராட்டம் நடந்து கொண்டிருக்கிறது. அப்பகுதியில் உள்ள பலதுறை அரசு ஊழியர்களையும் ஆசிரியர்களையும் ஒருங்கிணைத்துப் போராட்டத்தை வழி

நடத்துவதில் மணியன் சிறப்பாகச் செயல்பட்டது பிடித்துப் போனது கீதாவுக்கு. போராட்ட காலத்தில் ஊழியர்களைப் பாதுகாப்பதில் மணியன் கண்ணின் இமையாய் இருப்பதாகவே பட்டது கீதாவிற்கு.

பொழுது விடிந்ததைப் பக்கத்துவீட்டு அலாரம் உணர்த்தியது கீதாவிற்கு. நெட்டி முறித்து எழுந்தவள் தனது அறைக்குள்ளிருந்து வெளியே வந்தாள். அம்மா தெருவில் தண்ணீர் தெளித்து முடித்து கோலம் போட்டுக் கொண்டிருந்தாள். இன்னும் கீதாவைப் பார்க்கவில்லை. பார்த்தால் வழக்கமாக புலம்புவதைக் கேட்கலாம். "ஒருத்தன் வீட்டுக்கு வாழப் போறவ என்னதான் வேலைக்குப் போறவளா இருந்தாலும் வீட்டு வேலையை செய்து பழகிக்கனுமில்ல" வழக்கமாக வந்து விழும் அம்மாவின் வார்த்தைகள் இவை.

பல் துலக்கியவாறே கண்ணாடியில் பார்த்துக் கொண்டிருந்தவளுக்கு அவளின் முகம் தெரிய வில்லை. மணியனின் முகம் மட்டுமே தெரிந்தது வழக்கமான புன்முறுவலுடன். அப்பா இல்லாத அவன் தினமும் வேலைக்குப் போகும் அம்மா வுடன் இணைந்து சமையல் செய்வதை வழக்க மாகக் கொண்டிருப்பது இவளுக்கு ஆச்சரிய மாகவும் மகிழ்ச்சியாகவும் இருந்தது. இப்படிப் பட்டவர் கணவனாக அமைந்தால் எப்படி இருக்கும் என பலமுறை எண்ணிப் பார்த்தது முண்டு.

இன்றைக்கு ஏதாவது செய்ய வேண்டுமே என்று சமையல் கட்டுக்குள் சென்றவள் பால் பேக்கட்டைப் பிரித்து டீ போடத் தயாரானாள். உள்ளே நுழைந்த கீதாவின் அம்மாவிற்கு வியப்பாக இருந்தது. புருவத்தை உயர்த்தினாள்." என்ன டீ குடிக்க மாதிரி இருக்குமா? உங்கப்பாவப் பத்தித் தெரியுமில்ல" சொல்லிக் கொண்டே வெளியே எட்டிப் பார்த்தாள். கீதாவின் அப்பா எழுந்து கொண்டிருந்தார்.

"என்ன கீதா..மழை எதுவும் பெய்யுமா.. எழுந்ததும் சீக்கிரம்..டீ வேற போடுற.. அதிசயந்தான் போ..சும்மா சொல்லக்கூடாது. உங்க ஆபீஸ் வேலை பார்க்கிறாரே.. அதான் மணியன்.. அவர் போட்டுக் கொடுத்த டீயிருக்கே..என்னோட சர்வீஸ்லயே நான் பார்த்தில்ல அப்படியொரு டீயை.."

சிரித்துக் கொண்டே டீயை அப்பாவிடம் நீட்டிய கீதா "அப்படியொரு டீ மட்டுமில்ல.. அப்படி ஒரு மாப்பிள்ளையைன்னு சொல்லுங்க" என்று மனதுக்குள் சொல்லிக்கொண்டே இன்னொரு தம்ளரை அம்மாவிடம் கொடுத்து விட்டு தானும் ஒரு தம்ளருடன் நாற்காலியில் அமர்ந்தாள்.

"என்ன இருந்தாலும் அந்தத் தம்பி போட்ட டீ மாதிரி ஆகாது" என்று சொன்ன அப்பாவைப் பார்த்துத் தனக்குள் சிரித்துக்கொண்டே டீயை உறிஞ்சினாள்.

"என்னங்க..அந்தத் தம்பி என்ன சொல்லுச்சி..இன்னிக்கி வேலக்கிப் போகலன்னா டிஸ்மிஸ் தாங்கிறாங்களே..உங்க ஸ்கூல்ல மத்த டீச்சருங்க நெல என்ன..இந்த கழுத எதோ ஸ்டிரைக் ஸ்டிரைக்குன்னு குதிச்சிக்கிட்டே கெடக்கே.. இவ சர்வீசுக்கு வந்து ஒரு வருசந்தான் முடிஞ்சிருக்கு.. இந்த வருசம் நீங்க நல்லபடியே ரிடையர்மெண்ட் ஆகறதப் பாருங்க..இவ கல்யாணத்துக்கு அதத்தான மலயாட்டம் நம்பிக் கிட்டிருக்கீங்க.. நீட்.. நீட்டுன்னு விடியகாலம் வரைக்கும் படிச்சிட்டு தூங்கிக்கிட்டிருக்கானே கண்ணன்.. அவனோட படிப்புச் செலவு ஏகமா இருக்கப் போவுது..ஒழுங்கா ரெண்டு பேரும் இன்னிக்கி வேலைக்குப் போகறதப் பாருங்க".

அப்பாவும் மகளும் ஒருவரை ஒருவர் ஒரு நொடி பார்த்துக் கொண்டார்கள். டீ தம்ளரை மேசையில் வைத்துவிட்டு "தோ பார் கமலா.. உனக்கு இந்த போராட்டம் பத்தி முழுசா தெரியாது. நாங்க பாத்து முடிவு பண்ணிக்கிறோம்" இப்போது கீதாவையே பார்த்தார்.

டீ தம்ளரைக் கீழே வைத்துவிட்டு இதே மணியனா இருந்திருந்தா அருமையான விளக்கத்தைக் கொடுத்திருப்பார் என்று தனக்குள் நினைத்துக் கொண்ட கீதா அப்பாவைப் பார்த்தாள்.

"நீ என்ன சொல்ல வரேன்னு புரியுதும்மா.. மணியன் போட்டுக் கொடுத்த டீயப் பத்தி மட்டும் சொன்னாப் போதுமா.. அவர் ஸ்டிரைக் சம்மந்தமா சொன்ன விளக்கத்தச் சொல்ல வேணாமான்னு கேக்கறல்ல".

தலையசைத்த கீதாவின் கண்களைப் பார்த்தவாறே "மணியன் ஒரு லெக்சரே பண்ணிட்டாரு.. ஆனா நான் அவரத் தேடிப் போனது உன்னோடு ஸ்டிரைக் பத்தி முடிவெடுக்கத்தான். அவர் என்ன சொன்னாலும் எல்லா வாத்திமார்களும் வேலைக்குப் போறாத

முடிவெடுத்தாச்சு...ரிடையர்மெண்டுக்கு ஆறு மாதமே இருக்கிற நான் தனிப்பட்ட முடிவெல் லாம் பண்ணமுடியாது.. உன் சமாச்சாரம் என்ன.. இன்னும் புரபேஷன் டெக்ளேர் ஆகாத ஜூனியர் அசிஸ்டெண்ட் நீங்கறத ஞாபகம் வச்சி முடிவெடு"

விருட்டென்று எழுந்தார் கீதாவின் அப்பா. கீதாவின் அப்பா மூன்று டீ தம்ளர்களையும் எடுத்துக் கொண்டு சமையலறைக்குள் பேசிக் கொண்டே நுழைந்தாள்.

"தோ பாரு..ஒழுங்கு மரியாதையா இன்னிக்கு வேலைக்குப் போயிடு..சாப்பாடு கட்டித்தரேன்"

காதிற்குள் விழுந்த வார்த்தைகள் வேம்பாயின கீதாவுக்கு. சஸ்பெண்டாகியிருக்கும் மணியனின் முகம் கண்முன் வந்து போனது

இப்போதும் புன்முறுவலுடன். குளியலறைக் குச் சென்ற கீதாவிற்கு மட்டுமே தெரியும் சாப்பாடு டப்பாவுடன் இன்றைக்கு மறியலுக்குச் செல்ல உள்ளது. ❖

---

# மாநிலத் தலைவர் தோழர் மு.சுப்ரமணியன் தற்காலிக பணி நீக்கத்தை கண்டித்து ஆர்ப்பாட்டம்

ஜூலை 2 எழுச்சி நாள் நினைவாக மாநிலத் தலைவர் தோழர் சுப்ரமணியன் தற்காலிக பணி நீக்கத்தை கண்டித்து மாநிலம் முழுவதும் நடைபெற்ற தர்ணா போராட்டம் நடைபெற்றது.

### மதுரை

இந்திய தொழிற்சங்க மையம் ஆயுள் காப்பீட்டு கழகம் பிஎஸ்என்எல்இயு உள்ளிட்ட தொழிற்சங்க பங்கேற்புடன் தமிழ்நாடு அனைத்து துறை ஓய்வூதியர் சங்கம் உள்ளிட்ட தொழிற்சங்க நிர்வாகிகளுடன் மாலை நேர தர்ணா மிக எழுச்சியாக அண்ணா நகரில் நடைபெற்றது. இதில் மாவட்ட தலைவர் ஜெயராஜ இராஜேஸ்வரன் தலைமை தாங்கினார். மாவட்ட செயலாளர் நீதிராஜா கோரிக்கை விளக்க உரையாற்றினார். மற்ற தொழிற்சங்கத்தை சேர்ந்த நிர்வாகிகள் வாழ்த்திப் பேசினர். இறுதியில் தமிழ்நாடு அரசு ஊழியர் சங்க மாநில தலைவர் (பொறுப்பு) செல்வம் நிறைவுரையாற்றினார். மாவட்ட பொருளாளர் (பொறுப்பு) ராம்தாஸ் நன்றி கூறினார். 44 பெண்கள் உட்பட 146 பேர்கள் கலந்து கொண்டனர்.

### கடலூர்

மாவட்ட தலைவர் ஆர். பாலசுப்ரமணியன் தலைமையில் பழைய மாவட்ட ஆட்சியர் அலுவலகம் எதிரில் மாலை நேர தர்ணா போராட்டம் நடைபெற்றது. மாவட்ட செயலாளர் எல்.அரிகிருஷ்ணன் பணி இடைநீக்கம் செய்யபட்டுள்ள மாநில தலைவர் எம்.சுப்ரமணியனின் தற்காலிக பண நீக்கத்தை ரத்து செய்து பணி ஒய்வு நாள் 31.05.19-ல் பணி விடுவிப்பு ஆணை வழங்க வேண்டுமென தமிழக அரசை வலியுறுத்தி விளக்கவுரையாற்றினார். தொடர்ந்து ஆர்ப்பாட்டத்தில் துறைவாரி சங்க நிர்வாகிகள் கண்டன உரையாற்றினார்கள். பா.மகேஷ், அ.இராஜேந்திரன், எஸ்.வெங்கடேசன், இராம.வெங்கடாஜலபதி, கி.சுந்தரமூர்த்தி, கே.ரவி, ஆர்.பாஸ்கரன், ப.துளசி, டி.புருசோத்தமன் ஆகியோர் பேசினர். இறுதியாக மாநில துணை தலைவர் எஸ்.பார்த்திபன் தர்ணா போராட்டத்தை நிறைவு செய்து கண்டனவுரை ஆற்றினர். மாவட்ட பொருளாளர் டி.இரவிச்சந்திரன் நன்றி கூறினார். போராட்டத்தில் 124 ஆண்கள் 4 பெண்கள் உட்பட 128 பேர் கலந்துக் கொண்டனர்.

### திண்டுக்கல்

மாவட்ட தலைவர் விஜயகுமார் தலைமை தாங்கினார். மாவட்ட செயலாளர் முபாரக் அலி விளக்கவுரை ஆற்றினார். துறைவாரி சங்க நிர்வாகிகள் சுகந்தி, ராஜமாணிக்கம், பிச்சை வேலு, ராஜசேகர், ராமமூர்த்தி, திரவியம், சுப்பிரமணியன் ஆகியோர் கண்டனவுரை ஆற்றினர். மாவட்ட பொருளாளர் ராஜேந்திரன் நன்றி கூறினார். ❖

### வாசகர் குரல்

2019 ஜூலை இதழ் கிடைக்கப் பெற்றது. முன் அட்டைப் படம் அரசு ஊழியர் சங்க மாநில மாநாட்டை கம்பீரத்துடன் பறைசாற்றியது. வெளியிடப்பட்ட அனைத்து கட்டுரைகளும் சிறப்பாக இருந்தன. எரியும் பனிக்காடு புத்தக விமர்சனம் சிறப்பு.

**ரா.தட்சிணாமூர்த்தி**, கடலூர்

# சும்மாவா வந்தது ஓய்வூதியம்

சி.ஆர்.ராஜ்குமார்

"அரைக் காசு உத்தியோகம் என்றாலும்
அரண்மனை உத்தியோகம்"

என்பது பழமொழி.

அதன் அர்த்தம் அரசாங்க பணி என்பது பணிப் பாதுகாப்பு மற்றும் நிரந்தர வருமானம் என்பதே ஆகும். அரசாங்கத்தில் வேலை பார்க்கும்போது ஊதியம் வழங்குவது சரிதான். ஓய்வு பெற்று வீட்டில் சும்மா இருக்கும்போது ஓய்வூதியம் என்ற பெயரில் சம்பளம் வழங்குவது என்ன நியாயம்? என்ற கேள்வி எழத்தான் செய்யும். அப்படி என்றால் ஓய்வூதியம் என்பது அரசாங்கம் வழங்கும் கருணைத் தொகையா? அல்லது அரசு ஊழியரின் உரியைமா? என்பது குறித்து சற்று விரிவாக பார்ப்போம்.

நமது தேசத்தை ஆங்கிலேயர்கள் பிடித்து அரசாள்வதற்கு முன்பு இங்கு மன்னராட்சியே நிலவியது. அப்போது அரண்மனையிலும், அரசாங்க நிர்வாகத்திலும் வேலை செய்தவர் களுக்கு மாதாந்திர அல்லது வருடாந்திர ஊதியமாக தானியம் அல்லது பணமாக ஊதியம் வழங்கும் நடைமுறை இருந்து வந்துள்ளது. பணியில் இருந்து ஓய்வு பெற்ற பின்னர் ஓய்வூதியமோ அல்லது இறந்த ஊழியரின் குடும்பத் திற்கு குடும்ப ஓய்வூதியமோ வழங்கப்பட்டதாக தகவல்கள் ஏதும் இல்லை.

மன்னருக்காகவும், நாட்டுக்காகவும் உயிர் தியாகம் செய்த ஊழியர்களின் குடும்பத்துக்கு வீடுகள், நிலம் என்று மானியம் வழங்கப்பட்டதாக மட்டுமே சில வரலாற்று பதிவுகள் உண்டு.

## ஓய்வூதியத் துறை சீர்திருத்தங்கள்

அடிமை இந்தியாவில் பிரிட்டிஷ் ஆட்சியாளர்கள் தங்கள் நாட்டிலிருந்து அரசுப் பணியாளர்கள் பலரையும் இங்கு கொண்டு வந்து, அரசாங்க பணிகளில் ஈடுபடுத்தினர். கூடவே, இந்தியாவை ஆளுவதற்கான பல்வேறு தேவை களை ஒட்டி, அடிமை நாட்டுக் குடிமக்களான கல்வியறிவு பெற்ற இந்தியர்கள் பலரையும் அரசுப் பணியில் பிரிட்டிஷ் ஆட்சியாளர்கள் நியமித்தனர். இவர்களில் உயர் பதவிகளில் நியமிக்கப்பட்டவர்களுக்கு, பிரிட்டிஷ் அரசுப் பணியாளர்களுக்கு நீடிக்கப்பட்டது போல, ஒரு ஓய்வூதியத் திட்டத்தை அறிவித்து அமலாக்க வேண்டிய அவசியம் அந்நிய ஆட்சியாளர்களுக்கு நேரிட்டது. அதற்காக பிரிட்டிஷ் பாராளுமன்றத் தில் "இந்திய ஓய்வூதியச் சட்டம் 1871" என்ற ஒரு சட்டத்தை இயற்றி ஓய்வூதியம் வழங்குவது சட்டப்பூர்வமாக்கப்பட்டது. அந்த சட்டத்தில் "ஓய்வூதியம் என்பது மாட்சிமை தாங்கிய பிரிட்டிஷ் அரசாங்கம் வழங்கும் கருணைத் தொகை. அது அரசு ஊழியர் அடிப்படை உரிமை இல்லை" என குறிப்பிடப்பட்டுள்ளது.

முதல் உலகப் போர் முடிவுக்கு பின்னால், உலகத்தில் உதித்த முதல் சோசலிச நாடான சோவியத் யூனியனில் சமூகப் பாதுகாப்பு மிகச் சிறப்பான முறையில் அமுலாக்கப்பட்டது. தொட்டில் முதல் சுடுகாடு வரை குடிமக்கள் அனைவரது சமூக பாதுகாப்பு தேவைகளை ஒரு சோசலிச அரசு நிறைவேற்ற முற்பட்டபோது 1917இல் பென்சன் உள்ளிட்ட சமூக பாதுகாப்பு திட்டங்கள் சோவியத் யூனியனில் அறிமுகப் படுத்தலாயின.

இரண்டாம் உலகப் பெரும் போர் முடிவுற்ற நிலையில் கிழக்கு ஐரோப்பிய நாடுகள் பலவும் சோசலிசத்தை தழுவியதன் தொடர்ச்சியாக "சோசலிச உலகம்" முழுவதிலும் சமூகப் பாதுகாப்புக்கான உத்திரவாதம் பிறந்தது. எனவே, தத்தம் நாட்டு உழைப்பாளிகள் சோசலிசத்தின் பால் ஈர்க்கப்பட்டு விடுவார்களோ என்ற அபாயத்தை தவிர்க்கும் முயற்சியில் ஒரு பகுதியாக முதலாளித்துவ உலக நாடுகளும் சமூக பாதுகாப்பு திட்டமான ஓய்வூதியத் திட்டத்திற்கு முன்னுரிமை அளிக்க நேரிட்டது.

இந்த வகையில் இன்று உலக நாடுகள் பலவற்றிலும் அரைகுறைவாகவேனும் அமலாக்

கப்படுகிற ஓய்வூதியத் திட்டம் என்பது சோசலிசத்தின் நன்கொடை என்றே சொல்லலாம்.

இந்தியாவில் பிரிட்டிஷ் ஆட்சி இருக்கும் போதே 1920களில் Civilian Employees-க்கு ஓய்வூதியம் அறிமுகப்படுத்தப்பட்டது. அது Contributory Provident Fund ஆக இருந்தது. 1947இல் இந்தியா சுதந்திரம் அடைந்த பிறகு Contributory Provident Fund முறையிலான இந்த ஓய்வூதியத் திட்டம் விரிவுபடுத்தப்பட்டது. இதன்பிறகு 1957-களில் Contributory Provident Fund திட்டத்தில் மத்திய அரசு ஊழியர்கள் அனைவரையும் கட்டாயம் சேர்க்கப்பட வேண்டும் என்பதுடன் மாநில அரசு ஊழியர் களுக்கும் விரிவுபடுத்தப்பட்டது. அப்போது மாநில அரசுகள் பலவும் கடுமையான நிதி நெருக்கடியில் சிக்கி தவித்துக் கொண்டிருந்த பின்னணியில்தான் கட்ட வேண்டிய Matching Grant கட்டத் தவறியபோதுதான் Contributory Provident Fund என்பது General Provident Fund (GPF) ஆக மாற்றப்பட்டு இன்று 7.6% வட்டி வழங்கப்பட்டு வருகிறது. மத்திய, மாநில அரசுகள் கட்ட வேண்டிய அல்லது கட்டத் தவறிய Matching Grand தான் ஓய்வு பெற்ற பிறகு நாம் ஓய்வூதியமாக பெற்று வருகிறோம்.

இதன் அடிப்படையில்தான் 17.12.1982இல் உச்ச நீதிமன்றம் வரலாற்று சிறப்புமிக்க ஒரு தீர்ப்பை வழங்கியது. அந்தத் தீர்ப்பில், "ஓய்வூதியம் என்பது அரசின் கருணைத் தொகையோ, நன்கொடையோ அல்ல, ஓர் அரசு ஊழியர் பல ஆண்டு காலம் அரசாங்கத்துக்கும், பொது மக்களுக்கும் பணியாற்றியமைக்காக அவர் பெறும் உரிமைத் தொகை ஆகும். ஒரு அரசு ஊழியர் பணியில் இருக்கும்போது எந்த வசதி களுடன் வாழ்ந்தாரோ அதேபோல் கண்ணிய மாகவும், சுதந்திரமாகவும் வாழ்வதற்கேற்ற பென்சன் வழங்க வேண்டும். ஓய்வூதியம்என்பது கருணைத் தொகையல்ல, சட்ட ரீதியில் பெற வுள்ள ஊதியமே" என அந்தத் தீர்ப்பு கூறியது.

நாடாளுமன்றத்தில் நிறைவேற்றிய சட்டத்தை அதே நாடாளுமன்றம் மாற்றி விடலாம். ஆனால் உச்ச நீதிமன்ற தீர்ப்பை நாடாளுமன்றத்தால் மாற்ற முடியாது. ஏனெனில் அது அரசியல் சாசன அடிப்படையிலானது. ❖

# வா தோழா அமைப்பை பலப்படுத்துவோம்

**ம.அந்தோணிசாமி**

சமூகத்தில் மக்கள் குழு வாழ்க்கை முறையில் பல்வேறு நெறிமுறைகளின்படி வாழ்வை நடத்தி வந்துள்ளனர். யூத இன குழுவிற்கு 10 கட்டளை என்ற வாழ்க்கை நெறிமுறை மிகவும் அறியப்பட்ட ஒன்றாகும்.

தமிழகத்தில் கிட்டத்தட்ட அடிமைகளைப் போல அரசு ஊழியர் ஆசிரியர் சமூகம் இருந்த சூழலில், இந்திய திருநாட்டில் மத்திய மாநில அரசு ஊழியர்கள் மத்தியில் கடைக்கோடி வரிசையில் ஊதிய நிலையும், சமூக அந்தஸ்தில் அவ்வளவாக சொல்லிக் கொள்ளும்படியான நிலை இல்லாத சூழலில்,

அரசு ஊழியர்களுக்கு "வாழ்க்கை ஊதியம்" மற்றும் நல்ல பணி நிலையை உறுதிபடுத்துதல், சமூக கலாச்சார ஒழுக்க மற்றும் பொருளாதார நிலைகளை மேம்பாடு செய்தல், தொழிலாளி வர்க்கத்தினரிடையே ஒற்றுமையும் ஒருமைப்பாட்டையும் உருவாக்குதல், நேரிடையாகவோ அல்லது மறைமுகமாகவோ உறுப்பினர்கள் பழி வாங்கப் படுவதிலிருந்து பாதுகாப்பது போன்ற நோக்கங்களைக் கொண்டு மதுரை மாநகரில் 6.5.1984இல் உருவானது நமது அமைப்பு.

மே 6, 2019இல் 36ஆம் ஆண்டில் தனது பயணத்தை தொடரும் இவ்வேளையில் தான் ஏற்றுக்கொண்ட நோக்கங்களை நிறைவேற்றிட நடத்திய போராட்டங்கள் எண்ணற்றவை. அப்போராட்டங்களில் அரசின் அடக்குமுறைகளையும் சந்தித்து பீடு நடை போடுகின்ற அமைப்பு நமது அமைப்பு.

அரசு ஊழியர் சங்கம் நடத்திய ஒவ்வொரு இயக்கத்திற்கும் ஒரு கோட்பாட்டு ரீதியாக இலக்கு உண்டு. எப்படி பழைய ஏற்பாட்டில் 10 கட்டளை என்று அறியப்பட்ட கோட்பாடுகளைப் போல, 35 ஆண்டுகளில் கோட்பாட்டு ரீதியான குறிக்கோளுடன் கொண்ட 10 கட்ட போராட்டங்களை நடத்தி அரசு ஊழியர் ஆசிரியர்களின் வாழ்வை பாதுகாப்பதில், சமூக அங்கீகாரத்தில், நமது சங்கம் பங்களித்து கடமையை நிறைவேற்றியுள்ளது.

முதல்கட்ட போராட்டம் : மத்திய அரசுக்கு இணையான ஊதியம் கோரியது. 10.2.1988 ஒரு நாள் வேலை நிறுத்தம் தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் நடத்தியது. இந்த வேலை நிறுத்தம் வழங்கிய படிப்பினைதான் "ஜாக்டீ" என்ற பேரமைப்பை உருவாக்கி 21.6.1988இல் வேலை நிறுத்தம் துவங்கி 31 நாட்கள் நடைபெற்றது. பெண் ஊழியர்களும் ஆசிரியர்களும் குதிரைப் படையை எதிர்கொண்டு சென்னை

அண்ணா சாலையில் 22.7.1988இல் முற்றுகையிட்ட போராட்டம் தமிழக ஆளுநருடன் பேச்சுவார்த்தையில் உடன்படிக்கை ஏற்பட்டு 40 ஆண்டு கால கோரிக்கையை வென்றெடுத்த போராட்டமாகும்.

1991 இரண்டாம் கட்ட போராட்டம் : 1991இல் ஜீரோ பட்ஜெட் எதிர்ப்பு கருத்தரங்கம் நடத்தி அதன் வழிகாட்டலில் ஊழியரிடமும் மக்களிடமும் வாகன பிரச்சார இயக்கம் நடத்தியது (ஜீப் ஜாதா). அரசுத் துறைகளில் ஆட்குறைப்பு செய்வதையும் பணியிடங்களை குறைப்பதையும் ஊழியரிடமும் மக்களிடமும் கொண்டு சென்றோம்.

1992 மூன்றாம் கட்ட போராட்டம் : ஜூன் 1992 5வது ஊதியக் குழு நடைமுறைப்படுத்தியதானது அரசு ஊழியர் களையும் ஆசிரியர்களையும் பிரிக்கின்ற வேலையை அரசு செய்து முடித்தது. அரசு ஊழியர்களுக்குள்ளேயே பதவி களுக்குள் பிரிவினையை உருவாக்கியது. இவை அனைத்தும் ஊதிய நிர்ணயத்திலும் படிகளிலும் வெளிப்பட்டது. போராட்டம் அறிவிக்கப்பட்டு போராட்ட களத்தில் அரசு ஊழியர் சங்கம் அரசுடன் பேச்சுவார்த்தை நடத்தியது. அன்றைய முதல்வர் செல்வி. ஜெயலலிதா அவர்களுடன் தோழர் எம்.ஆர்.அப்பன் உட்பட அன்றைய என்ஜிஓ சங்கத் தலைவரும், பணியாளர் சங்கத் தலைவரும் உடன்படிக்கையை ஏற்று 5% தனி ஊதியத்தை அமைச்சுப் பணியாளர் அவர்தம் நிலையில் உள்ளவர் களுக்கு பெற்றோம். இந்த இயக்கம் பிரிவினையை எதிர்த்த ஒற்றுமையை கட்டிய போராட்ட இயக்கமாகும்.

1998 நான்காம் கட்ட போராட்டம் : 1998இல் ஊதிய மாற்றத்திற்கான இயக்கங்கள் நடைபெற்றது. மத்திய மாநில அரசு ஊழியர்கள் ஊதியக் குழு அமைப்பதற்கும் அதை நடைமுறைப்படுத்தவும் பலகட்ட இயக்கங்களை நடத்தினோம். மத்தியில் இடதுசாரிகள் ஆதரவுடன் மத்திய அரசு இருந்ததால் 40% ஊதிய உயர்வு பெற முடிந்தது. தமிழ்நாட்டில் அரசு ஊழியர் ஆசிரியர்களுக்கு ஊதிய உயர்வு Scale to Scale என்று கூறி முந்தைய ஊதிய குழுவைப் போல் ஊதியம் கிடைத்தாலும் படிகள் முழுமையாக கிடைப்பதற்கு தொடர்ந்து போராட்டங்களை நடத்தி வந்துள்ளோம். இந்த காலகட்டத்தில் இருப்பதை தக்கவைத்துக் கெள்ள நடத்திய போராட்டமாக அமைந்தது.

2002 ஐந்தாம் கட்ட போராட்டம் : 2002 பிப்ரவரியிலிருந்து நமது சங்கம் போராடி பெற்ற உரிமைகளை பறித்ததை கண்டித்து வீரச்சமர் புரிந்தது. 22.10.2002 முதல் 10 நாட்கள் வேலை நிறுத்தம் நடைபெற்றது. அன்றைய நிதி அமைச்சருடன் பேச்சு வார்த்தை நடைபெற்றது. உடன்பாடு ஏற்பட்டு எழுத்து பூர்வமாக உடன்படிக்கை செய்து கொண்டோம். ஆனால் அரசு நமது கோரிக்கைகளை நிறைவேற்றவில்லை. போராடி பெற்ற உரிமைகளை பாதுகாக்கவும், தக்கவைத்துக் கொள்ளவும் நடைபெற்ற இயக்கம். அரசின் வஞ்சகத்தை புரிய வைத்த இயக்கம். இந்த வேலை நிறுத்தம் ஜாக்டோ ஜியோ அமைப்பு வழிகாட்டலில் நடைபெற்றது.

2003 6ஆம் கட்ட போராட்டம் : தமிழக அரசு கொடுத்த வாக்குறுதியையும், நிதி அமைச்சருடன் ஏற்பட்ட ஒப்பந்தத்தையும் மீறியதோடு மேலும் அரசு ஊழியர்கள் மீது தாக்குதல் நடவடிக்கையாக ஓய்வு கால பணப்பயன் களுக்கு உத்தரவாதப் பத்திரம் வழங்கியது. ஒட்டுமொத்த தாக்குதலையும் சந்தித்த ஜாக்டோஜியோ கோட்டோஜியோ என இரு அமைப்புகளாக இருந்த அனைவரும் ஜூலை 2, 2003இல் வேலை நிறுத்த போராட்டத்தை நடத்தினோம். தமிழக அரசு 1.76 லட்சம் ஊழியரை பணி நீக்கம் செய்தது. டெஸ்மா சட்டத்தை பயன்படுத்தியது. கடுமையான அடக்குமுறைகளை ஏவியது. அரசு ஊழியர்கள் ஆசிரியர்களுக்கு ஆதரவாக தொழிலாளி வர்க்கமும், மத்திய தர ஊழியர்களும் களமிறங்கினர். தொழிலாளி வர்க்கத்தின் முன்னணி படையான சிஐடியு நமக்கு ஆதரவாக பழிவாங்கல் நடவடிக்கை மற்றும் டெஸ்மா சட்டத்தை எதிர்த்து உச்ச நீதிமன்றம் வரை சென்று வாதாடி வெற்றி பெற்றது. இறுதியாக சிறப்பு நீதிமன்ற விசாரணை யில் 999 பேர் இறுதியாக பணி நீக்கம் செய்யப்பட்டனர். 2004 நாடாளுமன்றத் தேர்தலில 40க்கு 40 என்று எதிர்க்கட்சிகள் பெற்ற வெற்றியின் காரணமாகவும், அடுத்து வரும் சட்டமன்றத் தேர்தலை சந்திக்கவும் அன்றைய முதல்வர் ஜெயலலிதா அவர்கள் அனைத்து நடவடிக்கை களையும் ரத்து செய்தார். அரசு ஊழியர்களையும் அடக்கி ஒடுக்கும் தன்மையுடையதுதான் அரசு என்பது அனைவருக்கும் புரிய வைத்த போராட்ட இயக்கம். அரசு ஊழியர்களும், தொழிலாளி வர்க்கமும் இணைய வேண்டும் என்ற படிப்பினையை கற்றத்தந்த போராட்டமாகும்.

2011 பிப்ரவரி ஏழாம் கட்ட போராட்டம் : ஊதிய மாற்றத்தில் திணிக்கப்பட்ட முரண்பாடுகள், சத்துணவு, அங்கன்வாடி ஊழியர்கள் பணி நிரந்தரம் மற்றும் சாலைப் பணியாளர்கள் பணி நிரந்தரம் ஆகியவற்றை தீர்ப்பதற்கான இயக்கமாக இந்தக் காலத்தில் போராட்டம் நடைபெற்றது. கடுமையான போலீஸ் தாக்குதலை சந்தித்த இயக்கம். முதல்வர் கலைஞர் அவர்களுடன் வீட்டில் பேச்சுவார்த்தை ஏற்பட்டு உடன்பாடு ஏற்பட்டது. கோரிக்கைகள் முழுமையாக நிறைவேறவில்லை.

2016 எட்டாம் கட்ட போராட்டம் : சிபிஎஸ்ஐ ரத்து செய்ய வேண்டும், சத்துணவு, அங்கன்வாடி ஊழியர்கள் கால முறை ஊதியம் பெற வேண்டும் என்பதற்கான இயக்கம் நடைபெற்றது. அன்றைய முதல்வர் ஜெயலலிதா அவர்கள் சிபிஎஸ்ஐ ரத்து செய்ய ஆய்வுக் குழுவை 110 விதியின்கீழ் சட்டமன்றத்தில் அறிவிக்க வைத்த போராட்டமாகும்.

2017 ஜாக்டோஜியோ : ஒன்பதாம் கட்ட போராட்டம் 2017 செப்டம்பரில் 11 நாள் வீரமிக்க போராட்டம் நடைபெற்றது. நமது போராட்டத்தை ஒடுக்க அரசு குறுக்கு வழியில்

நீதிமன்றம் தலையிட செய்தது. நாமும் நீதிமன்றத்தை சந்தித்தோம். தலைமைச் செயலாளரை நீதிமன்றத்தில் ஏற்றிய வரலாற்றை உருவாக்கினோம். இந்தப் போராட்டம் சிபிஎஸ் ரத்துக்காகவும் ஊதிய மாற்றத்திற்காகவும் நடைபெற்றது. கடந்த காலங்களுக்கு மாறாக ஊதிய மாற்றம் 1.1.2016 லிருந்து 21 மாத கால இடைவெளியில் புதிய ஊதியத்தை பெற்றோம்.

2019 பத்தாம் கட்ட போராட்டம் : 2019 ஜனவரி 11 நாள் ஜாக்டோஜியோ போராட்டம் சிபிஎஸ்ஐ ரத்து செய்யவும், ஆட்குறைப்பு திட்டத்தை கைவிடவும் தனியார்மயமாக்கலை தடுத்து நிறுத்தவுமான போரட்டமாக அமைந்தது.

இத்தனை போராட்டங்களும் ஏன் நடந்தன? யாருக்காக நடந்தன? நாம் ஒரு தலைமுறை மாற்றத்தில் நிற்கின்றோம். 1980இல் இந்திய அரசின் தனியார்மய நடவடிக்கை 1990களில் உலகமய நடவடிக்கைகள் 2000லிருந்து தாராளமய நடவடிக்கைகள் என இத்தனையும் ஒருசேர நம்மை தாக்கி வருகிறது. அது மட்டுமல்லாமல் சமூகத்திலும் மாற்றத்தை உருவாக்கியுள்ளது. போராடும் ஒரு அமைப்பு போராடுவதற்கான ஊழியர்களை திரட்டிக் கொண்டே இருக்க வேண்டும். அணிதிரட்டலுக்கான அனைத்து வகையான வழிவகைகளையும் நாம் பின்பற்ற வேண்டும். அந்த வழிமுறையில் தான் 2017இல் உருவான ஜாக்டோஜியோ அமைப்பு தொடர்ந்து மூன்றாம் ஆண்டில் பயணிக்கிறது.

இப்படி நாம் நடத்திய போராட்டங்களில் பிரதானமானதும் வரலாற்றில் பதியபட்ட போராட்டங்களுமான இந்த குறிப்பிடப்பட்ட 10 கட்ட போராட்டங்களிலும் 10 கட்டளைகளை போன்று அமைந்து விட்டது. அதேசமயம் இந்த 10 சட்டளைகளும் 2 கட்டளைகளில் அடங்கும் என்று புதிய ஏற்பாட்டில் கூறுவார்கள். நமது போராட்டங்களும் 3 கோட்பாடுகளின் விளைவாக அமைந்துள்ளது. அதுதான் LPG என்று சொல்லக்கூடிய தாராளமயம் (L), தனியார்மயம் (P), உலகமயம் (G) ஆகும். இந்த மூன்று மயங்களும் மக்களை மயக்கி மாயையில் வாழ்க்கையை நடத்தத் தள்ளியுள்ளது. இவை போதாதென்று மேலும் இந்திய மக்களை தாக்கக்கூடிய ஒரு புதிய மயம் ஒன்று மத்தியில் ஆட்சிக் கட்டிலில் அமர்ந்துள்ளது. இந்த மயம் ஒவ்வொரு மனிதனையும் தனித்தனியாக பிரிக்கும் தன்மையுடையது. இதனை புரிந்துகொண்டு சங்கப் பணியாற்றுவதும், ஊழியர்களை திரட்டுவதும் மெய்யான கடமையாகும்.

அந்த மெய்யான கடமையை நாம் நிறைவேற்ற வேண்டிய கடப்பாட்டில் சங்கத்தின் அமைப்பு விதிகளுக்கு உட்பட்டு வட்டக் கிளை மாநாடுகள், மாவட்ட மாநாடுகளை சிறப்பாக நடத்தி வலுவான அமைப்பாக நமது சங்கத்தை முன்னெடுத்துச் செல்வோம்.

அணிதிரள்வோம்! ஆர்ப்பரிப்போம்!! அரசின் பழி வாங்கும் நடவடிக்கைகளுக்கு எதிராக!!! வா தோழா.... ❖

# 7.7.2019 ஜாக்டோ–ஜியோ உண்ணாவிரதம்

*2.7.2019 அன்று சட்டமன்றத்தில் நடைபெற்ற பள்ளிக் கல்வித் துறை மற்றும் உயர் கல்வித்துறை மானிய கோரிக்கையில் ஜாக்டோ ஜியோவின் கோரிக்கைகள் சார்ந்து எந்தவித அறிவிப்பும் வெளியாகவில்லை. ஜாக்டோ ஜியோ போராட்டத்தின்போது ஆசிரியர் அரசு ஊழியர்கள் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் ரத்து செய்யப்படும் என்ற அறிவிப்பாவது வெளியாகும் என்று எதிர்பார்த்து காத்திருந்தோம் அதிலும் எந்தவித அறிவிப்பும் இல்லை.*

*பழைய ஓய்வூதியம் உள்ளிட்ட ஒன்பது அம்சக் கோரிக்கைகளை உடனே நிறைவேற்ற வேண்டும், வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டவர்களின் மீதான பழிவாங்கல் நடவடிக்கைகள், புனையப்பட்ட பொய் வழக்குகள், பழி தீர்க்கும் பணியிட மாறுதல்களை ரத்து செய்து மறுக்கப்படும் பதவி உயர்வினை வழக்கிட வேண்டும், போராட்டத்தை வழி நடத்தியதற்காக மாநில ஒருங்கிணைப்பாளர் மு.சுப்பிரமணியன் பணி ஓய்வு பெறும் நாளில் பழிவாங்கும் நோக்கில் தற்காலிகப் பணிநீக்கம் செய்ததை ரத்து செய்ய வேண்டும்,*

*வேலை நிறுத்தப் போராட்டத்தில் பங்கேற்றதற்காக 28.01.2019ல் தற்காலிகப் பணி நீக்கம் செய்யப்பட்டு இதுநாள் வரை மீளப் பணியமர்த்தப்படாமல் உள்ள கிருஷ்ணகிரி மீன்வள மேற்பார்வையாளர் கா.சின்னசாமியை மீளப் பணியமர்த்திட வேண்டும், ஜாக்டோ-ஜியோ உயர்மட்டக்குழு உறுப்பினரும் தலைமையாசிரியருமான பா.ரவிச்சந்திரனின் தற்காலிகப் பணிநீக்கத்தினை ரத்து செய்ய வேண்டும் என வலியுறுத்தி சென்னை சேப்பாக்கம் வளாகத்தில் உண்ணாநிலை அறப்போராட்டம் நடைபெற்றது.*

*மாணவர்களின் கல்வி பாதிப்பு ஏற்படாத வண்ணம் போராட்டம் ஞாயிற்றுக்கிழமையன்று நடைபெற்றது. இதில் ஜாக்டோ-ஜியோவினர் ஏராளமானோர் கலந்து கொண்டனர்.* ❖

# ஊரக வளர்ச்சித் துறை அலுவலர்கள் சங்க மாநில மாநாடு

**த**மிழ்நாடு ஊரக வளர்ச்சித் துறை அலுவலர்கள் சங்கத்தின் 9வது மாநில மாநாடு 2019 ஜூலை 26, 27 தேதிகளில் திருநெல்வேலி மாவட்டம் தென்காசியில் அம்மையப்பன் அரங்கில் மாநிலத் தலைவர் மு.சுப்பிரமணியன் தலைமையில் நடைபெற்றது. வரவேற்புக் குழு தலைவர் கா.துரைசிங்ர வரவேற்றார். முன்னாள் பொதுச் செயலாளர் ந.சேகர் துவக்கவுரை ஆற்றினார். துறைவாரி சங்க நிர்வாகிகள் கே.ஆர்.கணேசன், ஆர்.பார்த்திபன், அ.கென்னடி பூபாலராயன் ஆகியோர் வாழ்த்தி பேசினர். பெரணமல்லூர் சேகரன் எழுதிய 'முடிவல்ல ஆரம்பம்' என்ற சிறுகதை தொகுப்பு நூலினை ச.ராமமூர்த்தி வெளியிட்டார். பொதுச் செயலாளர் எஸ்.ரமேஷ், பொருளாளர் மா.விஜயபாஸ்கர் ஆகியோர் முறையே செயலாளர் அறிக்கை மற்றும் நிதிநிலை அறிக்கை தாக்கல் செய்தனர்.

மாலையில் ஓய்வு பெற்ற மாநில நிர்வாகிகள் மற்றும் ஜாக்டோ-ஜியோ போராட்டத்தில் சிறை சென்றவர்களுக்கு மாநில துணைத் தலைவர் ந.திருவரங்கன் தலைமையில் பாராட்டு விழா நடைபெற்றது. மா.மாணிக்கவாசகம் வரவேற்றார். மாநிலத் தலைவர் மு.சுப்பிரமணியன், துணைத் தலைவர் எஸ்.புஷ்பநாதன், முன்னாள் நிர்வாகிகள் ஆ.மணியன், எம்.புஷ்பநாதன், முன்னாள் நிர்வாகிகள் ஆ.மணியன், எம்.முத்துராமன் ஆகியோர் பாராட்டி பேசினர். ச.பாரி நன்றி கூறினார்.

2ஆம் நாள் மாநாடு பிரதிநிதிகள் மாநாடாக நடைபெற்றது. தமிழ்நாடு அரசு ஊழியர் சங்க மாநில பொதுச்செயலாளர் மு.அன்பரசு நிறைவுரையாற்றினார். சங்க மாவட்டச் செயலாளர் க.சுப்பிரமணியன் நன்றி கூறினார்.

மாலையில் ஆசாத் நகர் பாலம் அருகிலிருந்து நடைபெற்ற பேரணியை அரசு ஊழியர் சங்க மாநிலத் தலைவர் (பொறுப்பு) ஆ.செல்வம் துவக்கி வைத்தார். மாநாட்டிற்கு முன்னாள் மாநிலத் தலைவர் தலைமையேற்றார். துணைத் தலைவர் வெ.சண்முகசுந்தரம் வரவேற்றார். சிஐடியு அகில இந்திய துணைத் தலைவர் ஏ.கே.பத்மநாபன் துவக்கவுரையாற்றினார். மாநிலத் தலைவர் எஸ்.ரமேஷ், அரசு ஊழியர் சங்க மாநில துணைத் தலைவர் என்.குமாரவேல், சங்க முன்னாள் தலைவர் கே.எஸ்.வீரபானு ஆகியோர் வாழ்த்தி பேசினர். முன்னாள் பொதுச் செயலாளர் பெ.கிருஷ்ணசாமி நிறைவுரை யாற்றினார். சங்கத்தின் மூத்த தலைவர்கள் கௌரவிக்கப்பட்டனர். சங்க மாவட்டத் தலைவர் சு.பார்த்தசாரதி நன்றி கூறினார் ❖

## தமிழ்நாடு ஊரக வளர்ச்சித் துறை அலுவலர் சங்கத்தின் புதிய நிர்வாகிகளை வாழ்த்துகிறோம்

| மாநில தலைவர் | பொதுச்செயலாளர் | பொருளாளர் |
|---|---|---|
| எஸ்.ரமேஷ் | ச.சபரி | மா.விஜய பாஸ்கர் |

**மாநில துணை தலைவர்கள்**

ந.திருவேரங்கன், எம்.பழனியப்பன், எஸ்.காந்திமதி நாதன்,
வெ.சண்முக சுந்தரம், ஆர்.ஆறுமுகம், ஜெ.பாஸ்கர்பாபு

**மாநில செயலாளர்கள்**

மு.செல்வகுமார், ந.ஜெயசங்கர், ச.ராஜசேகர்,
ஆர்.சௌந்தரபாண்டியன், பி.சார்லஸ் சசிகுமார், நா.புகழேந்தி

# ஒரு நாடு ஒரு ரேசன் அட்டை

ஒரே நாடு, ஒரே தேர்தல், ஒரே வரி, ஒரே தகுதித் தேர்வு, ஒரே நீதித்துறை தேர்வு என்று பலவாறு மத்திய அரசிடமிருந்து வாசகங்கள், கொள்கை முடிவுகள் வலம் வந்து கொண்டிருக்கின்றன. இவையெல்லாம் கூட்டாட்சி அல்லது வளர்ச்சியின் வெளிப்பாடா? என்று கேட்டால் அதுவன்று. இவையனைத்தும் மத்திய அரசின் சர்வாதிகாரப் போக்கு மற்றும் மாநில அரசின் உரிமைகளை பறிக்கும் செயல்களே ஆகும்.

இந்த வரிசையில் மாநிலங்களின் உரிமைகளை ஒவ்வொன்றாக பறிக்க முயலும் ஆதிக்க மேலாண்மை கொண்ட மத்திய அரசு, கடந்த ஜூன் 30ஆம் தேதி அறிவித்துள்ளதுதான் ஒரு நாடு ஒரு ரேசன் அட்டை என்ற திட்டம் ஆகும். இது மத்திய அரசு அறிவித்துள்ள கூட்டுறவு கூட்டாட்சிக்கு எதிரானது ஆகும்.

## பொது விநியோகத் திட்டம்

பொது விநியோகக் திட்டம் என்பது உலக நாடுகளை ஒப்பிடும்போது மிகப்பெரிய உணவுப் பாதுகாப்புத் திட்டமாகும். இரண்டாம் உலகப் போரின்போது முதன்முதலாக செயல்படுத்தப் பட்ட ரேசன் திட்டமானது பொது விநியோகத் திட்டமாக இந்தியாவில் பின்வரும் காலகட்டங் களில் படிப்படியாக செயல்பாட்டிற்கு வந்துள்ளது.

## 1940 பொது நிரந்தர தேவை திட்டம்

*1965* தேசிய உணவுக் கழகம் (FCI) மற்றும் விவசாய விளைபொருள் விலைக் கமிசன் (Agriculture Prices Commission)

*1997* இலக்கு பொது விநியோகத் திட்டம் (Targetted PDS)

*2000* அந்தியோதயா அன்ன யோஜனா திட்டம் (AAY)

*2001* மத்திய அரசுக்கும் மக்கள் சிவில் சுதந்திர அமைப்புக்கும் இடையேயான வழக்கில் மாண்பமை உச்ச நீதிமன்றமானது உணவு என்பது அடிப்படை உரிமை என்ற தீர்ப்பு வழங்கியது.

*2013* தேசிய உணவுப் பாதுகாப்புச் சட்டம் (National Food Security ACT-NFSA)

*2016* பொது விநியோகத் திட்டத்தினை மின்னணுமயமாக்குதல் (e-PDS) குடும்ப அட்டைதாரர்களின் ஆதார் எண் மற்றும் மொபைல் எண்ணினை குடும்ப அட்டையுடன இணைத்தல்.

பொது விநியோகத் திட்டத்தின் மூலம், உணவானது எளிதில் கிடைக்கும் வகையிலும் (Availability) எளிதில் அணுகும் வகையிலும் (Accessibility) மலிவு விலையிலும் (Affordability) மற்றும் உணவு ஏற்புடைமை (Acceptability) ஆகியவற்றை அரசு உறுதி செய்ய வேண்டியது அவசியமாகும். இத்திட்டத்தினை மாநில அரசு செயல்படுத்தி வருகிறது.

## ஒரு நாடு ஒரு ரேசன் அட்டை திட்டம்

பொது விநியோகத் திட்டத்தில் ஒருங்கிணைந்த நிர்வாகம் கொண்டு வருகிறோம் என்று உள்நோக்கத்துடன் கூடிய ஒரு திட்டத்தின்கீழ் கிராமங்களில் அரிசி, பருப்பு வழங்குவதைக் கூட மத்திய அரசு செய்ய முடிவு செய்துள்ளது. பொது விநியோகத் திட்டத்தினை வருகின்ற 30.06.2020க்குள் ஒருங்கிணைந்த நிர்வாகத்தின்கீழ் அமல்படுத்த வேண்டும் என்று மாநிலங்களுக்கு கெடு விதித்துள்ளது. இதன்மூலம் இடம் பெறுபவர்கள் அல்லது புலம் பெயர்ந்தவர்கள் (Migrants) நாட்டில் உள்ள எந்தவொரு நியாய விலைக் கடை மூலம் தன் விருப்பத்திற்கேற்ப பொது விநியோகத் திட்டப் பொருள்களையும் பெறலாம் என மத்திய அரசு அறிவித்துள்ளது. மேலும், இதன்மூலம் ஒருவன் 2 ரேசன் அட்டைகளை பயன்படுத்தும் நிலை தவிர்க்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## தமிழ்நாட்டில் பொது விநியோகத் திட்டம்

பொது விநியோகத் திட்டமானது மாநில அரசின் அடிப்படை உரிமை மற்றும் பொறுப்பு ஆகும். தமிழ்நாடானது பொது விநியோகத் திட்டத்தின் கீழ் சுமார் 35000 நியாய விலைக் கடைகளை நடத்தி வருகிறது. கூட்டுறவுத் துறை (93%), தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் (5%), மகளிர் (1%), மீனவர், பனைவெல்ல கூட்டுறவுகள் (1%) மற்றும் நகரும் கடைகள்

ஆகியவை மூலம் நியாயவிலைக் கடைகளை நடத்தி வருகிறது.

இந்நியாயவிலைக் கடைகள் மூலம் பொது விநியோகத் திட்டத்தின்கீழ் அரிசி, ஏஏஒய் அரிசி, ஒஏபி, ஏபிஎன் அரிசி, கோதுமை, சர்க்கரை, ஏஏஒய் சர்க்கரை, மண்ணெண்ணெய், துவரம் பருப்பு மற்றும் சமையல் எண்ணெய் ஆகிய அத்தியாவசிய மற்றும் சிறப்பு பொது விநியோகத் திட்டப் பொருட்களை தகுதியுள்ள குடும்ப அட்டைதாரர்களுக்கு வழங்கி வருகிறது.

கடந்த செப்டம்பர் 2008இல் 1 கிலோ அரிசி ரூ.1க்கு வழங்கப்பட்டு வந்த நிலையில் 1.6.2011 முதல் விலையில்லா அரிசி வழங்கப்பட்டு வருகிறது. தமிழ்நாடு அரசானது 226 தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக கிட்டங்கிகளின் மூலம் பொது விநியோக திடப் பொருட்களை நியாய விலைக் கடைகளுக்கு நகர்வு செய்து வருகிறது.

தமிழ்நாட்டின் சிறப்பம்சம் என்னவென்றால் அனைவருக்கும் உணவு கிடைக்கும் நோக்கில் (Universal Public Distribution System) என்ற திட்டத்தினை செயல்படுத்தப்பட்டு வருகிறது.

மேலும், மத்திய அரசின் மிரட்டலுக்கு அஞ்சி, தேசிய உணவுப் பாதுகாப்புச் சட்டத்தில், தமிழ்நாடு அரசு கையெழுத்திட்டு 1.11.2016 முதல் அமுல்படுத்தி வருகிறது. இதன்கீழ் ஒரு நபருக்கு 5 கிலோ அரிசி வழங்கப்படுவதை அரசு உறுதி செய்திட வேண்டும். மேலும் 1.2.2017 முதல் விலையில்லா கோதுமையும் வழங்கப்பட்டு வருகிறது.

இருப்பினும் தமிழ்நாட்டில் உள்ள 2 கோடி குடும்ப அட்டைதாரர்களுக்கான நிரந்தர தேவையில் பின்வரும் அளவுக்கே அத்தியா வசியப் பொருட்கள் வழங்கப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது.

| அத்யாவசியப் பொருளின் பெயர் | குடும்ப அட்டைதாரர்களின் நிரந்தர தேவையில் வழங்கப்படும் அளவு |
|---|---|
| அரிசி | 70% |
| கோதுமை | 12% |
| சர்க்கரை | 91% |
| மண்ணெண்ணெய் | 14% |
| ஏஏஒய் அரிசி | 92% |
| துவரம் பருப்பு | 83% |
| சமையல் எண்ணை | 83% |

இன்று அறியப்பட்ட நாகரிகம் போதுமான உணவு வழங்கல் இல்லாமல் பரிணாமம் அடைந்திருக்க முடியாது.

**- நார்மன் போர்லாக்**

ஒரே நாடு ஒரு ரேசன் அட்டை திட்டத்தினால் தமிழ்நாட்டிற்கு ஏற்படவுள்ள பாதிப்புகள்:

மாநில அரசின் கட்டுப்பாட்டின் கீழ் செயல்படுத்தப்படும் பொது விநியோகத் திட்டமானது மத்திய அரசின் நேரடி கட்டுப்பாட்டிற்கு செல்லும் நிலை ஏற்படும்.

மாநில உரிமைகள் பறிபோவதுடன் இது மத்திய அரசின் கூட்டுறவு கூட்டாட்சி (Co-operative Federalism) என்ற கொள்கைக்கு இது விரோதமானது ஆகும்.

தமிழ்நாட்டில் அனைவருக்கும் உணவு என்ற அடிப்படையில் செயல்படுத்தப்பட்டு வரும் (Universal Public Distribution System) திட்டம் செயலிழக்கும் நிலை ஏற்படும்.

ஒவ்வொரு மாநிலத்திற்கும் தனித்தனியே பொது விநியோகத் திட்ட விதிமுறைகள் நடைமுறையில் உள்ள நிலையில் ஒரு நாடு ஒரு ரேசன் அட்டை மூலம் அவை அனைத்தும் ஒரு விதிமுறையின்கீழ் கொண்டு வரப்படும். இதனால் உள்ளூர் மக்களின் தேவை சந்திக்கப்படாத நிலை எழும்.

மத்திய அரசின் சந்தர்ப்பவாத சூழ்ச்சி வலையான நேரடி உதவி பரிமாற்றம் (Direct Benefit Transfer) என்ற அடிப்படையில், பொது விநியோகத் திட்ட பொருட்களுக்கு பதிலாக மான்யத்தினை நேரடியாக வங்கிக் கணக்கில் செலுத்தும் திட்டத்தினை நடைமுறைப்படுத்த இது வழிவகுக்கும். தற்போது நடைமுறையில் உள்ள எல்பிஜி சிலிண்டருக்கான மான்யத்தினை பயனாளிகளின் வங்கிக் கணக்கில் செலுத்தும் திட்டம் மற்றும் மான்யத்தினை கைவிடும் திட்டம் (Give it up) ஆகியவை போன்று இதுவும் ஏழைகளின் வஞ்சிக்கும் செயல் ஆகும்.

அத்தியாவசியப் பொருட்களின் தேவை ஒதுக்கீடு நகர்வு மற்றும் விநியோகத்தினை மாதந்தோறும் சரிவர கண்காணிக்க தவறும் நிலை ஏற்படுவதுன் ஊழலுக்கு வழிவகுக்கும்.

நியாயவிலைக் கடைகளுக்கு விற்பனை முனைய இயந்திரம் வழங்கி குடும்ப அட்டை

தாரர்களின் ஆதார் எண் மற்றும் மொபைல் எண்ணினை ஒரு காரணத்தைக் கூறி குடும்ப அட்டையுடன் பதிவேற்றம் செய்ததே இது போன்ற ஒரு நாடு ஒரு ரேசன் அட்டை திட்டம் அமல்படுத்த ஏதுவாகும் என்பதை மனதில் வைத்தே செயல்படுத்தி உள்ளது என்பது தற்போது தெரிய வந்துள்ளது.

**நிறைவாக..**

*மருந்தென வேண்டாவாம் யாக்கைக்கு அருந்தியது*
*அற்றது போற்றி உணின்*

*(குறள். 942)*

மத்திய அரசானது ஒரு கார்ப்பரேட்டு களுக்கான அரசாகவும் ஏழைகளை சுரண்டி அதை பெருகடனாக கார்ப்பரேட்டுகளுக்கு வழங்கி அவர்களை பத்திரமாக வெளிநாடுகளுக்கு அனுப்பி வைக்கிறது. அதே நேரத்தில் பொது விநியோகம் போன்ற கிராமப்புற ஏழைகள் பயன்பெறும் திட்டத்தில் கை வைப்பது எறியும் தீயில் எண்ணெய் வார்ப்பது போன்றது ஆகும். ஒவ்வொரு மாநிலத்திலும் அம்மாநில மக்களுக்கு ஏற்ப உணவு பழக்க வழக்கங்கள் இருக்கும் சூழ்நிலையில் இதுபோன்ற ஒரு நாடு ஒரு ரேசன் அட்டை என்ற திட்டம் ஏழை மக்களுக்கு பயன்தரும் வகையில் இருக்காது என்றால் அது மிகையாகாது.

2019 மக்களவைத் தேர்தலில் பெரும்பான்மை யுடன் ஆட்சிக்கு வந்துள்ள நிலையில் இது போன்ற ஒரு நாடு ஒரு தேர்தல் ஒரு வரி ஒரு தேர்வு ஒரு ரேசன் அட்டை ஆகிய மக்கள் நலன்சாரா திட்டங்களை கொண்டு வருவதில் தீவிரம் காட்டி வருவது மிகவும் வருந்தத்தக்கது ஆகும்.

மற்ற மாநிலங்களில் இலக்கு பொது விநியோகத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வரும் நிலையில் தமிழ்நாட்டில் அனைவருக்குமான பொது விநியோகத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. அதனை தொடர்ந்து, சீரிய வகையில், உணவு என்பது அடிப்படை உரிமை என்ற வகையில் தமிழ்நாட்டு அரசு முழு முயற்சி எடுக்க வேண்டியது அவசியமாகும்.

**- லூ.ஜோ.சில்வஸ்டர், தூத்துக்குடி**

# மாவட்ட / வட்டக் கிளை மாநாடுகள்

## காஞ்சிபுரம் மாவட்ட மாநாடு

12வது மாவட்ட மாநாடு திருக்கழுகுன்றத்தில் 2019 ஜூலை 19, 20 தேதிகளில் நடைபெற்றது. சங்கக் கொடியை மாவட்டத் தலைவர் வெ.லெனினும், சம்மேளனக் கொடியை மாநிலச் செயலாளர் தி.கலைச்செல்வியும் ஏற்றி வைத்தனர். தொடர்ந்து நடைபெற்ற நிகழ்வுக்கு மாவட்டத் தலைவர் தலைமையேற்றார். மாவட்ட இணைச் செயலாளர் அஞ்சலி தீர்மானத்தை முன்மொழிந்தார்.

வரவேற்புக் குழுத் தலைவர் ஜெ.செல்வன் வரவேற்றார். மாநில பொருளாளர் எம்.தங்கராஜ் துவக்கவுரையாற்றினார். செயலாளர் அறிக்கை மற்றும் நிதிநிலை அறிக்கை தாக்கல் செய்யப் பட்டது. ஆரம்பப் பள்ளி ஆசிரியர் கூட்டணியின் மாவட்டச் செயலாளர் கே.டி.அனுக்குமார், அனைத்துத் துறை ஓய்வூதியர் சங்கத்தின் மாவட்டத் தலைவர் என்.சாரங்கன் வாழ்த்தி பேசினர்.

பின்னர் சிறை சென்ற தோழர்களுக்கும், ஓய்வு பெற்ற மாவட்ட நிர்வாகிகளுக்கும் பாராட்டு விழா நடைபெற்றது. முன்னாள் மாவட்ட பொருளாளர் பி.ராமமூர்த்திக்கு நடைபெற்ற அரசு பணி நிறைவு பாராட்டு விழாவில் நினைவுப் பரிசு வழங்கப்பட்டது. மாவட்ட இணைச் செயலாளர் எஸ்.ரஞ்சித் நன்றி கூறினார்.

இரண்டாம் நாள் நடைபெற்ற நிர்வாகிகள் தேர்வில் தலைவராக வி.லெனின், துணைத் தலைவர்களாக ஏ.சுகுமாரன், எஸ்.பரணி, ஆர்.கோவிந்தன், கே.பூங்குழலி, செயலாளராக சி.முகம்மது உசேன், இணைச் செயலாளர்களாக எம்.தாமோதரன், வி.குமார், டி.கன்னியப்பன், கே.ஜெயக்கமார், பொருளாராக எம்.என்.ஸ்ரீகுமார் ஆகியோர் தேர்வு செய்யப்பட்டனர். 13வது மாநில மாநாட்டில் பங்கேற்கும் பிரதிநிதிகள் தேர்வு செய்யப்பட்டனர். நிறைவாக மாநிலச் செயலாளர் ஆர்.கலைச்செல்வி உரையாற்றினார். மாவட்ட துணைத் தலைவர் ஆர்.கோவிந்தன் நன்றி கூறினார்.

இதனைத் தொடர்ந்து மகளிர் மாநாடு தலைவர் வெ.லெனின் தலைமையில் நடைபெற்றது. மகளிர் துணைக் குழு அமைப்பாளர் ஏ.பேபி

வரவேற்றார். மகளிர் துணைக் குழு அமைப்பாளர் கே.பூங்குழலி அறிக்கை சமர்ப்பித்தார். சமூக செயல்பாட்டாளர் மு.நிர்மலாதேவி நிறைவுரை யாற்றினார். துணைக் குழு உறுப்பினர் ஆர்.பாலசுகாம்பாள் நன்றி கூறினார்.

திருக்கழுகுன்றம் உழவர் சந்தை அருகிலிருந்து புறப்பட்ட பேரணியை அரசு கல்லூரி ஆசிரியர் மன்ற மாவட்டத் தலைவர் ப.கி.கிள்ளிவளவன் துவக்கி வைத்தார். இதில் 300-க்கும் மேற்பட்ட ஊழியர்கள் கலந்து கொண்டனர். பேரணி பொது மாநாடு நடைபெறும் பேருந்து நிலையம் வரை சென்று நிறைவு பெற்றது. மாவட்டத் தலைவர் வெ.லெனின் தலைமையில் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் ஜெ.செல்வன் வரவேற்றார். சா.முகம்மது உசேன் தீர்மான விளக்கவுரை யாற்றினார். தமிழ்நாடு ஆரம்பப் பள்ளி ஆசிரியர் கூட்டணியின் முன்னாள் மாநிச் செயலாளர் ஜெ.மத்தேயு, சிஐடியு மாவட்டத் தலைவர் எஸ்.கண்ணன் சிறப்புரையாற்றினர். மாநிலச் செயலாளர் தி.கலைச்செல்வி நிறைவுரையாற்றி னார். வரவேற்புக் குழு செயலாளர் வி.கெங்காதரன் நன்றி கூறியதுடன் மாநாட்டு நிகழ்ச்சிகள் நிறைவடைந்தன.

## தஞ்சை மாவட்ட மாநாடு

13வது மாநாடு 27.7.2019 அன்று தஞ்சாவூரில் நடைபெற்றது. மாவட்டத் தலைவர் சை.கோவிந்தராசு தலைமை தாங்கினார். மாவட்ட துணைத் தலைவர் சிவ.இரவிச்சந்திரன் அஞ்சலித் தீர்மானத்தை வாசித்தார். இணைச் செயலாளர் ச.செல்வி வரவேற்றார், மாநிலச் செயலாளர் இரா.பன்னீர்செல்வம் துவக்கி வைத்தார். செயலாளர் ஆ.ரெங்கசாமி வேலை அறிக்கை யினையும், பொருளாளர் சா.கோதண்டபாணி வரவு-செலவு அறிக்கை யினையும், மகளிர் துணைக்குழு உறுப்பினர் எச்.உமா மகளிர் அறிக்கையையும் சமர்ப்பித்தனர்.

துறைவாரி சங்க, தோழமை சங்க நிர்வாகிகள் இரா.தமிழ்மணி, ஆர்.ராஜகோபாலன், எஸ்.செல்வராஜ், பா.பார்த்தசாரதி ஆகியோர் வாழ்த்துரை வழங்கினார்கள்.

மாவட்ட நிர்வாகிகள் தீர்மானங்களை முன் மொழிந்தனர். மாநிலச் செயலாளர் எம்.சௌந்தர ராஜன் நிறைவுரை ஆற்றினார். மாவட்டத் துணைத் தலைவர் எம்.என்.சாந்தாராமன் நன்றி கூறினார்.

தலைவராக சா. கோதண்டபாணி, துணைத் தலைவர்களாக சிவ.இரவிச்சந்திரன், எம்.என்.சாந்தாராமன், சா.தமிழ்வாணன், ப.கோதண்டபாணி, செயலாளராக ஆ.ரெங்கசாமி, இணைச் செயலாளர்களாக ச.செல்வி, ஆ.செந்தில் குமார், எஸ்.மகேஷ், எஸ்.அறிவழகன், மாவட்ட பொருளாளர் கே.பாஸ்கரன், தணிக்கையாளர் களாக உ.ராகவன், எஸ்.பலராமன் ஆகியோர் புதிய நிர்வாகிகளாக தேர்வு செய்யப்பட்டனர்.

## வட்டக் கிளை மாநாடுகள்

### தங்கசாலை

பகுதிக் குழு மாநாடு 20.7.2019 அன்று வடசென்னை ஐடிஐ வளாகத்தில் நடைபெற்றது. சங்கக் கொடியினை தலைவர் ஜி.மகேந்திரனும், சம்மேளனக் கொடியை மாவட்டச் செயலாளர் ஜெ.பட்டாபியும் ஏற்றி வைத்தனர். மாவட்ட இணைச் செயலாளர் ஜெ.சரஸ்வதி துவக்கவுரை யாற்றினார். மு.விவேகானந்தன், தாமோதரன் ஆகியோர் முறையே செயலாளர் மற்றும் நிதிநிலை அறிக்கை தாக்கல் செய்தனர். மாவட்டச் செயலாளர் ஜெ.பட்டாபி நிறைவுரையாற்றினார். அஜய்ராஜ் நன்றி கூறினார். மாநாட்டை வாழ்த்தி முன்னாள் மாநில துணைத் தலைவர் எஸ்.ஏ.வெற்றிராஜன் உள்ளிட்ட துறைச் சங்க நிர்வாகிகள் பேசினார்.

தலைவராக ஜி.மகேந்திரன், துணைத் தலைவர்களாக ஆர்.ஜெய்கணேஷ், லட்சுமணன், பி.திருமகள், செயலாளராக மு.விவேகானந்தன், இணைச் செயலாளர்களாக ஏ.ஜி.பாலாஜி, கே.கிருஷ்ணமூர்த்தி, மோகன்தாஸ், மாதவன், குப்பம்மாள், பொருளாளராக வி.தாமோதரன், மகளிர் துணைக் குழு அமைப்பாளராக ஆ.சுமதி ஆகியோர் தேர்வு செய்யப்பட்டனர்.

### எழும்பூர்

பகுதிக்குழு மாநாடு 27.7.2019 அன்று ஜீவனஜோதி அரங்கில் நடைபெற்றது. சங்கக் கொடியினை பா.அன்சர்பாஷாவும், சம்மேளனக் கொடியினை மாவட்டச் செயலாளர் பட்டாபியும் ஏற்றி மாநாட்டை துவக்கி வைத்து உரையாற்றி னார். இணைச் செயலாளர் வி.காமராஜ் அம்பேத்கர், ஏ.விஜயா ஆகியோர் முறையே செயலாளர் அறிக்கை மற்றும் நிதிநிலை அறிக்கை தாக்கல் செய்தனர். மாவட்ட பொருளாளர் எஸ்.பார்த்திபன் நிறைவுரையாற்றினார். தேசிங்கு

நன்றி கூறினார். முன்னாள் மாநில துணைத் தலைவர் பி.எஸ்.அப்பர் உள்ளிட்ட துறைச்சங்க நிர்வாகிகள் வாழ்த்தி பேசினார். தலைவராக எல்.புகழானந்த், துணைத் தலைவர்களாக ஜி.எம்.தவலத்துல்லா, உமாராணி, செயலாளராக பா.அன்சர் பாஷா, இணைச் செயலாளர்களாக வீ.காமராஜ் அம்பேத்கர், ஆ.அசோக் குமார், பொருளாளராக அ.விஜயா, மகளிர் துணைக் குழு அமைப்பாளராக வசந்தி ஆகியோர் தேர்வு செய்யப்பட்டனர்.

## சென்னை மாநகராட்சி

பகுதிக்குழு மாநாடு 27.7.2019 அன்று செங்கொடி சங்க அலுவலகத்தில் நடைபெற்றது. சங்கக் கொடியை பகுதி தலைவர் பி.சீனிவாசலு, சம்மேளனக் கொடியை மாவட்டத் தலைவர் ம.அந்தோணிசாமி ஏற்றி வைத்து துவக்கவுரை யாற்றினார். வை.சிவகுமார், ச.ஜீவன் ஆகியோர் முறையே செயலாளர் அறிக்கை மற்றும் நிதிநிலை அறிக்கையை தாக்கல் செய்தனர். மாவட்டச் செயலாளர் ஜெ.பட்டாபி நிறைவுரையாற்றினார். முன்னாள் மாநில துணைத் தலைவர்கள் பி.எஸ்.அப்பர், எஸ்.ஏ.வெற்றிராஜன் ஆகியோர் வாழ்த்தி பேசினர். தலைவராக பி.சீனிவாசலு, துணைத் தலைவர்களாக சு.ருக்மாங்கதன், எஸ்.ரவி, செயலாளராக வை.சிவகுமார், இணைச் செயலாளர்களாக நா.செந்தில்குமார், பொன்.நெடுமாறன், த.பாலகுரு, ஆர்.சரவணன், ஆர்.ராஜேஷ்குமார், பொருளாளராக ச.ஜீவன், மகளிர் துணைக் குழு அமைப்பாளராக து.கோமளா, தணிக்கையாளராக வி.சி.கஜேந்திரன் ஆகியோர் தேர்வு செய்யப்பட்டனர்.

## கிருஷ்ணகிரி

தேன்கனிக்கோட்டை, ஊத்தங்கரை வட்டக் கிளை மாநாடு முறையே 20.7.2019, 22.7.2019 ஆகிய நாட்களில் நடைபெற்றது. இரண்டிலும் மாவட்டத் தலைவர், மாவட்டச் செயலாளர் பங்கேற்றனர். தேன்கனிக்கோட்டையில் 45 பெண்கள் உட்பட 79 பேரும், ஊத்தங்கரையில் 14 பெண்கள் உடப்ட 42 பேரும் கலந்து கொண்டனர். தேன்கனிக்கோட்டை கிளை தலைவராக என்.அன்பழகன், துணைத் தலைவர் களாக பி.செல்லப்பன், எம்.ராஜண்ணா, செயலாளராக எம்.முருகேசன், இணைச் செயலாளர்களாக வி.சுகந்தப்பிரியன், பி.மதியழகன், கே.சீனிவாசன், பொருளாளராக என்.சுரேஷ்குமார் ஆகியோரும், ஊத்தங்கரை கிளைத் தலைவராக வி.ஏ.சரவணன், துணைத் தலைவர்களாக சின்னண்ணன், ஜி.ஜெயராஜ், செயலாளராக எஸ்.செந்தில்குமார், இணைச் செயலாளர்களாக பி.பிரசாந்த், இளங்கோ, பொருளாளராக எஸ்.சுபாஷ் சந்திரபோஸ் ஆகியோர் தேர்வு செய்யப்பட்டனர்.

## திருப்பூர்

**உடுமலைப்பேட்டை** 13வது வட்டக் கிளை மாநாடு 27.07.2019 நடைபெற்றது. புதிய நிர்வாகிகள் தேர்வு செய்யப்பட்டனர். தலைவராக தா.வைரமுத்து, செயலாளராக மா.பாலசுப்பிரமணியன், பொருளாளராக தி.திலீப், துணைத் தலைவர்களாக பி.செல்வக்குமார், ஆர்.சண்முக சுந்தரம், ஆர்.நாகராஜன், பி.ஆனந்தராஜ், இணைச் செயலாளர்களாக வி.ஈஸ்வரி, கே.வெங்கிடுசாமி, எம்.சுரேஷ்குமார், வி.பரமேஸ்வரன், மாவட்ட செயற்குழு உறுப்பினராக ஆர்.ஜெகதீஸ்வரன், ஆகியோர் தேர்வு செய்யப் பட்டனர். மேலும் ஜாக்டோ-ஜியோ போராட்டத்தில் சிறை சென்ற தோழர்களுக்கு பாராட்டு விழா மற்றும் பணி ஒய்வு பெற்ற நிர்வாகி களுக்கான பாராட்டு விழா நடைபெற்றது.

## நாகப்பட்டினம்

தமிழ்நாடு அரசு ஊழியர் சங்க வேதாரண்யம் வட்ட மாநாடு வட்டத் தலைவர் பழ.பக்கிரிசாமி தலைமையில் வேதாரண்யத்தில் 01.08.19 அன்று நடைபெற்றது. வட்ட துணைத் தலைவர் பி.பன்னீர்செல்வம் வரவேற்புரையாற்றினார். முன்னாள் வட்டச் செயலாளர் எம்.ஜி.இராமமூர்த்தி துவக்கவுரையாற்றினார்.

வே.கணேசன் வேலை அறிக்கையையும், ஜி.பழனித்துரை வரவு-செலவு அறிக்கையையும் சமர்ப்பித்தனர். வட்ட நிர்வாகிகள் தீர்மானங்களை முன்மொழிந்தனர்.

ஊரக வளர்ச்சித்துறை அலுவலர் சங்க மாவட்டத் தணிக்கையாளர் வி.தங்கராசு, சாலைப் பணியாளர்கள் சங்க உட்கோட்டத் தலைவர் கா.இராதாராமன் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். மீன்வளத்துறை ஊழியர் சங்க மாநிலத் தலைவர் ரா.நடேசராஜா சிறப்புரை யாற்றினர். அரசு ஊழியர் சங்க மாவட்டச் செயலாளர் ஏ.ட்டீ.அன்பழகன் நிறைவுரை யாற்றினார். வட்ட பொருளாளர் ஜி.பழனித்துறை நன்றி கூறினார்.

❖

"நரேந்திர மோடி, ஒரு மூர்க்கத்தனமான தலைவராக மீண்டும் தேர்ந்தெடுக்கப்பட்டிருக் கிறார். நரேந்திர மோடியின் அபரிமிதமான வெற்றியின் அடிப்படை, இந்தியக் கலாச்சாரத்தை இந்து விழுமியங்களின் அடிப்படையில் வரையறுத்திடும் சித்தாந்தம் இந்துத்துவாவாகும். அடுத்த ஐந்தாண்டுகளுக்கு இதனை எவ்வித எதிர்ப்புமின்றி அனுமதித்தோமானால் அது நாட்டை ஓர் ஆபத்தான எல்லைக்கே இட்டுச் செல்லும்."

குஜராத் கோப்புகள்- மறைக்கப்பட்ட கோரிக்கை வடிவங்கள் என்னும் நாலின் ஆசிரியர் ரானா அய்யூப் என்பவர் டைம் இதழில் இவ்வாறு தெரிவித்திருப்பது அர்த்த அடர்த்தி மிக்க தென்பதை நரேந்திரமோடி பாரதப் பிரதமராகப் ஜாடிக்கேற்ற மூடியாய் மோடிக்கேற்ற எடப்பாடி யாய்த் தமதரசை இடைத் தேர்தலில் தக்க வைத்துக் கொண்ட தமிழக அரசு கொண்டு வந்துள்ள புதிய பாட நூல்களில் மகாகவி பாரதி யின் படத்தைக் காவிமயமாக்கியிருப்பதும் தமிழைச் சிறுமைப்படுத்தி சம்ஸ்கிருதத்தை உயர்த்திப் பிடித்திருப்பதும் கசக்கும் உண்மை.

அரசுப் பள்ளிகள்-அருகமைப் பள்ளிகள் ஒழிக்கப்பட்டு கல்வி தனியார்மயம் ஆக்கப்பட்டு கார்ப்பரேட் கரங்களில் ஒப்படைக்கப்பட உள்ளது. கல்விக் கொள்கையை விமர்சித்த நடிகர் சூர்யாவை பா.ஜ.க.வினர் சகட்டு மேனிக்கு வசைமாரி பொழிந்தது வெறுப்பரசியலைத் தவிர வேறெதுவுமில்லை.

# வேகம் பெறும் பாசிச ஆட்சி

பொறுப்பேற்ற நாள் முதலாக நடைபெற்று வரும் நிகழ்வுகள் நிரூபித்துக் கொண்டிருக்கின்றன.

இரண்டாவது முறையாக ஆட்சிக்கு வந்த மோடி முதல் முறையைப் போல் நாடாளுமன்ற கட்டடத்தை விழுந்து வணங்கவில்லை. மாறாக அரசியல் சட்டப் புத்தகத்தை வணங்கினார். நாடாளுமன்ற கட்டடத்தை அவர் வணங்கி ஆட்சிக்கு வந்த முதல் ஆட்சிக் காலத்தில் அவர் நாடாளுமன்றத்திற்கு எவ்வித மரியாதையும் அளிக்கவில்லை. மாறாக நாடாளுமன்றத்திற்கு வருவதையடுத்து, விவாதங்களுக்குப் பதில் அளிப்பதையோ ஒரு பொருட்டாகக்கூட கடைப் பிடிக்கவில்லை. உண்மையில் நாடாளுமன்றம் சிறுமைப்படுத்தப்பட்டது. தற்போது அரசியல் சட்டத்தை வணங்கிய நிகழ்வைப் பார்க்கும்போது அவரது அடுத்த குறி அரசியல் சட்டமாகத்தான் இருக்கும் என்பதில் எவ்வித ஐயமுமில்லை. ஒரே நாடு, ஒரே மதம், ஒரே மொழி, ஒரே கலாச்சாரம், ஒரே குடும்ப அட்டை, ஒரே தேர்தல் எனும் கொள்கைகளை நிறைவேற்றும் நகர்வுகள் வேகம் பிடித்துள்ளன. இது அதிபர் ஆட்சி முறையை நோக்கிச் செல்லும் ஆபத்தான அணுகுமுறை என்பதில் மாற்றுக் கருத்தில்லை.

'தேசிய கல்விக் கொள்கை-2019' மூலம் இந்தி மொழி கட்டாய மாக்கப்பட்டுள்ளது. சம்ஸ்கிருதக் கல்விக்கும் முக்கியத்துவம் தரப்பட்டுள்ளது.

முத்தலாக் சட்டத்தைத் தமது அசுர பலத்தால் மக்களவையில் நிறைவேற்ற முடிந்தது. முஸ்லிம் பெண்கள் மீது கரிசனம் கொள்பவராகக் காட்டிக் கொள்ளும் பிரதமர் மோடி சாதி மறுப்புத் திருமணம் செய்யும் இளம் பெண்களும், இளைஞர்களும் கொடுமையான முறையில் கொல்லப்படும் நிகழ்வுகள் தொடர்ந்து நடை பெற்று வருவதைத் தடுக்கவோ அல்லது தலித்துகள் மீது நடைபெறும் சாதிய வன்கொடுமைகளுக்கு முடிவு கடடவோ எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்வதில்லை.

இந்தியாவின் நிதி ஆயோக், மத்திய புலனாய்வுத் துறை, தேர்தல் ஆணையம், ரிசர்வ் வங்கி, உச்சநீதிமன்றம் என அனைத்து நிறுவனங் களும் மத்திய அரசின் ரிமோட் கண்ட்ரோலில் இயங்கும் நிறுவனங்களாக்கப்பட்டுவிட்டன. தொழிலாளர் உரிமைகளைப் பறிக்க வசதியாக தொழிலாளர் சட்டங்கள் திருத்தப்பட்டுவிட்டன.

மோடி இரண்டாம் முறையாக ஆட்சிப் பொறுப்பேற்ற நாள் முதலாக முஸ்லீம்கள் மற்றும் தலித்துகள் மீதான தாக்குதல்கள் வீரியம் பெற்றுள்ளது வேதனை தருகிறது. முகம்மது பர்கத் ஆலம் எனும் 25 வயதான டெய்லர் பள்ளி வாசலில் தொழுகை முடிந்து வந்தபோது குருகிராம் என்னுமிடத்தில் அவரைச் சூழந்த சங்பரிவார குண்டர்கள் அவரை 'வந்தே மாதரம்'

'ஜெய் ஸ்ரீராம்' முழக்கமிட வற்புறுத்தி அடித்துத் துவைத்துள்ளனர். முகம்மது காசிம் எனும் முஸ்லிம் பீகார் மாநிலத்தில் பெகுசராய் மாவட்டத்தில் முஸ்லிம் என்பதாலேயே சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார். மிர் காசிம் எனும் இளைஞர் கும்ப்ளி கிராமத்தில் சுடப்பட்டார். தில்லியில் முரசு ஆசிரியர் முகமது கோமின் , புனாவைச் சேர்ந்த அருண் கத்ரே 'ஜெய் ஸ்ரீராம்' என முழக்கமிடுமாறு கூறி தாக்கப்பட்டனர். பைசல் எனும் முஸ்லிம் ஓட்டுனர் தாக்கப்பட்டார். கான்பூர் அருகே கித்வாய் எனும் கிராமத்தில் முகம்மது தாஜுதீன் 'ஜெய்ஸ்ரீராம்' முழக்கமிட நிர்ப்பந்திக்கப்பட்டு தாக்கப்பட்டார். மேற்கு வங்க மாநிலம் 24 பர்கானா மாவட்டத்தில் ஆபீஸ் முகம்மது சார்க் ஹால்தர் ரயிலில் பயணம் செய்து கொண்டிருந்தபோது கடுமையாக தாக்கப்பட்டு ரயிலிலிருந்து தூக்கி வீசப்பட்டார். கேரள மாநிலத்திலிருந்து வயதான பசுக்களுக்கு வடமாநில கோசாலையில் சேர்ப்பதற்காகக் கொண்டு சென்ற விக்ரமன் பசு குண்டர்களால் கடுமையாகத் தாக்கப்பட்டு கொல்லப்பட்டார். அசாமில் ஜோதிகாவ்ன் பகுதியில் மருந்துக் கடை ஊழியரின் ராகிபுல் காக்கை 'ஜெய் ஸ்ரீராம்' கோஷமிடச் சொல்லி கடுமையாகத் தாக்கியுள்ளனர். மத்தியப்பிரதேச மாநிலத்திலிருந்து 20 பசு மாடுகளுடன் 24 நபர்கள் வேனில் பயணித்துள்ளனர். இவர்களில் 6 பேர் முஸ்லிம்கள். 100க்கும் மேற்பட்டோர் வாகனத்தை மறித்து 24 பேரையும் இரும்புச் சங்கிலியில

கட்டிப் போட்டு சாலையில் முழங்காலிட வைத்து சித்ரவதை செய்துள்ளனர். 'கௌமாதாகீ ஜே' என முழக்கமிடுமாறு அடித்துத் துன்புறுத்தி 3 கிலோமீட்டர் நடக்க வைத்தே காவல் நிலையத்திற்கு இழுத்துச் சென்றுள்ளனர். பசு குண்டர்களின் சொல்படியே 24 பேரையும் 'மத்தியப்பிரதேச கோவன்ஷ்வத்' சட்டத்தின் கீழ் கைது செய்தது காவல்துறை. ஆட்டோவில் மாட்டிறைச்சி எடுத்துச் சென்றதாகக் கூறி இஸ்லாமிய ஆண்கள் இருவரை மரத்தில் கட்டிவைத்துத் தாக்கியுள்ளனர்.

ஜார்க்கண்டில் 24 வயது ஸ்ரீதப்ரேஸ் அன்சாரி மதவெறி கும்பலால் வழி மறிக்கப்பட்டு 'ஜெய்ஸ்ரீராம் மற்றும் ஜெய்ஸ்ரீ அனுமான்' என முழக்கமிட வலியுறுத்தி மின்சாரக் கம்பத்தில் இரவு முழுவதும் கட்டி வைத்து அடித்து உடைத்துக் கொன்று போட்டது சங் பரிவார கும்பல்.

ராஜஸ்தான் மாநிலத்தில் கோயிலுக்குச் சாமி கும்பிடச் சென்ற தலித் சிறுவன் ஆதிக்க சாதியினரால் கடுமையாகத் தாக்கப்பட்டுத் தவறான புகாரின் பேரில் காவல்துறையினர் சிறுவனைக் கைது செய்து சீர்திருத்தப்பள்ளியில் அடைத்துள்ளனர். 'ஜெய்ஸ்ரீராம்' சொல்ல மறுத்ததால் காவிக்கும்பலால் எரித்துக் கொல்லப்பட்ட 15 வயதே நிரம்பிய முகம்மது காலித் எனும் சிறுவனின் உடல் பனாரஸ் மருத்துவக் கல்லூரியில் உடற்கூராய்வு செய்து முடிந்தபின் அந்த உடலை எடுத்துச் செல்ல ஆம்புலன்ஸ் வசதி கூட மறுத்து ஒரு மினி லாரியில் மகனின் உடலை அச்சிறுவனின் தந்தை சுல்பிகர் அலி எடுத்துச் சென்ற கொடுமை அண்மையில் அரங்கேறியுள்ளது. உச்சகட்டமாக தமிழ்நாட்டில் மாட்டுசூப் சாப்பிட்டு சமூக வலைதளத்தில் பகிர்ந்த இளைஞரை நாகப்பட்டினம் மாவட்டத்தில் காவிக் கூட்டம் கடுமையாகத் தாக்கி தமிழகத்திலும் 'கும்பல் தாக்குதல்' துவக்கி வைக்கப்பட்டுள்ளது அதிர்ச்சி அளிக்கிறது.

இப்படியாய் தொடரும் கும்பல் கொலைகளைக் கண்டித்து மணிரத்தினம் உள்ளிட்ட திரை இயக்குனர்கள் மத்திய அரசைக் கண்டித்து கடிதம் எழுதினர். எதிர்வினையாக பொருத்தமற்ற கேள்விகளைக் கேட்டு சில திரை நட்சத்திரங்கள் மூலமாக எதிர்வினையாக கடிதம் ஒன்றினை மத்திய அரசுக்கு அனுப்பியுள்ள நாடகத்தையும் அரங்கேற்றியது சங்பரிவாரம்.

இத்தகைய கும்பல் தாக்குதல் ஒருபுறம் எனில் விவசாயிகள் விரோதக் கொள்கைகளான எட்டு வழிச்சாலை, மீத்தேன் ஹைட்ரோகார்பன், ஷேல் காஸ், நியூட்ரினோ போன்ற திட்டங்களில் தீவிரம் காட்டி வருகிறது மத்திய அரசு. நாட்டின் பொற்கோயில்களான பொதுத்துறை நிறுவனங்களை அடிமாட்டு விலைக்கு விற்கும் பணி வேகமாக நடைபெற்று வருகிறது. தேசிசியப் புலனாய்வுச் சட்டம் என்ற பெயரில் அராஜகம் அரங்கேற ஆள்வோருக்குச் சிவப்புக் கம்பளம் விரிக்கப்பட்டுள்ளது பழிவாங்கும் நடவடிக்கைகளைத் தீவிரப்படுத்தவே.

ஜெர்மனி இட்லரின் பாசிச பாணியிலான சர்வாதிகாரப் பாதை சர்வ நாசத்தை விளைவிக்கும் என்பதை நினைவு கூர்ந்து ஜனநாயகத்தைப் பாதுகாக்க மக்கள் அணி திரள வேண்டியது காலத்தின் அவசியம்.

**பெரணமல்லூர் சேகரன்**

## வரவேற்புக் குழு அமைப்புக் கூட்டம்

### நாகப்பட்டினம்

மாநாட்டு வரவேற்புக் குழு அமைப்பு கூட்டம் 27.07.19 அன்று மாலை, சங்க கூட்ட அரங்கில் மாவட்டத் தலைவர் ப.அந்துவன் சேரல் தலைமையில் நடைபெற்றது. மாவட்டச் செயலாளர் ஏ.ட்டீ.அன்பழகன் வரவேற்புரை யாற்றினார். வருவாய்த்துறை அலுவலர் சங்க மாவட்டச் செயலாளர் து.இளவரசன், மாவட்டப் பொருளாளர் பிச்சைபிள்ளை, சத்துணவு ஊழியர் சங்க மாவட்டத் தலைவர் தேன்மொழி, மாவட்ட இணைச் செயலாளர்கள் எம்.நடராஜன், ஆர்.கலா, கே.ராஜு, ஓய்வுபெற்ற ஆசிரியர் சங்கத் தலைவர் வி.பாலசுப்பிரமணியன், ஓய்வூதியர் சங்க மாவட்டச் செயலாளர் சொ.கிருஷ்ணமூர்த்தி, வட்ட நிர்வாகிகள் ஜி.காளிமுத்து, ஆர்.பக்கிரி சாமி, தொலைத்தொடர்புத் துறை ஓய்வூதியர் சங்க தலைவர் குருசாமி, நாகை வட்டத் தலைவர் எம்.மேகநாதன், ஆரம்பப்பள்ளி ஆசிரியர் கூட்டணி மாவட்டச் செயலாளர் எம்.காந்தி, மாநிலத் துணைத் தலைவர் ஆர்.சித்ரா ஆகியோர் பங்கேற்று மாவட்ட மாநாட்டை எழுச்சியுடன் நடத்த வேண்டியதன் தேவையையும் அதற்கு தமது முழு ஒத்துழைப்பையும் நல்குவதாக உறுதியளித்து வாழ்த்துரை வழங்கினர்.

அரசு ஊழியர் சங்க முன்னாள் மாநில துணைத் தலைவரும் நாகை தொழிற்சங்கக் கூட்டமைப்பு தலைவருமான சு.சிவகுமார் வரவேற்புக் குழு தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டார். எதிர்வரும் 23.08.19 மற்றும் 24.08.19 ஆகிய இரண்டு நாட்கள் நாகப்பட்டினம் அரசு ஊழியர் சங்க கட்டிடத்தில் மாவட்ட மாநாட்டை நடத்துவது எனவும் மாநில நிர்வாகிகள் மற்றும் தொழிற்சங்கத் தலைவர்களை மாநாட்டில் கலந்து கொள்ள அழைப்பது எனவும் தீர்மானிக்கப்பட்டது. நிறைவாக நாகை வட்டச் செயலாளர் எம்.தமிழ்வாணன் நன்றி கூறினார்.

### வடசென்னை

12ஆம் மாவட்ட மாநாட்டு வரவேற்புக் குழு அமைப்புக் கூட்டம் 24.7.2019 அன்று திருவல்லிக் கேணியில் நடைபெற்றது. மாவட்டத் தலைவர் ம.அந்தோணிசாமி தலைமையேற்றார். மாவட்டச் செயலாளர் ஜெ.பட்டாபி மாநாட்டின் நோக் கங்கள் குறித்து உரையாற்றினார். வரவேற்புக் குழு நிர்வாகிகள் முன்மொழியப்பட்டு ஏகமனதாக ஏற்கப்பட்டது. பொதுச் செயலாளர் மு.அன்பரசு சிறப்புரையாற்றினார். மாவட்டப் பொருளாளர் எஸ்.பார்த்திபன் நன்றி கூறினார். வரவேற்புக் குழு தலைவராக எஸ்.ஏ. வெற்றிராஜன், செயலாளராக ஜெ.பட்டாபி, பொருளாளராக எஸ்.பார்த்திபன், துணைத் தலைவர்கள், இணைச் செயலாளர்கள் உள்ளிட்ட 39 பேர் கொண்ட வரவேற்புக் குழு அமைக்கப்பட்டது. ❖

## தோழர் எம்.ஆர்.அப்பன் நினைவஞ்சலி - 30.08.2019



தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் ஸ்தாபக தலைவர்களில் ஒருவரான அருமைத் தோழர் ஆசான் எம்.ஆர்.ஏ. அவர்களின் நினைவைப் போற்றுவோம்.

தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் ஸ்தாபக தலைவரும், அகில இந்திய மாநில அரசு ஊழியர் சம்மேளத்தின் கௌரவ தலைவர், அரசு ஊழியர் இயக்கத்தின் ஆசானாக திகழ்ந்த அருமைத் தோழர் எம்.ஆர்.ஏ. அன்று அன்போடு அழைக்கப்படும் தோழர் எம்.ஆர்.அப்பன் அவர்களின் 14ஆம் ஆண்டு நினைவு தினம் வரும் 30.8.2019 அன்று வரவுள்ளது.

அரசு ஊழியர்களின் கோரிக்கைகளை 1970ஆம் ஆண்டு காலங்களில் இருந்த என்ஜிஓ சங்கம் புறந்தள்ளி ஆட்சியாளர்களுக்கு வாளாக சென்றதை எதிர்த்து நீண்ட போராட்டங்களை நடத்தி அரசு ஊழியர்களின் உரிமைகளை முன்னிறுத்தியும், தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தை தோற்றுவித்து போராடும் அமைப்பாக வளர்த்தெடுத்ததிலும், அரசு ஊழியர்-ஆசிரியர்களை ஒற்றுமைப்படுத்துவதிலும் மத்திய அரசுக்கு இணையான ஊதியத்தை பெற்றதிலும் அகில இந்திய மாநில அரசு ஊழியர் சம்மேளனத்திற்கு மகத்தான பங்கை செலுத்தியதிலும் தனது இறுதி மூச்சு வரை இயக்கம் ஒன்றே லட்சியமாக பணியாற்றி எம்ஆர்ஏ அவர்களை நினைவில் நிறுத்துவோம்.

- மாநில மையம்

# கிராம சுகாதார செவிலியர் கோரிக்கை நிறைவேற்றப்படும என உறுதி



பெருந்திரள் முறையீட்டில் பங்கேற்ற கிராம சுகாதார செவிலியர்களில் ஒரு பகுதியினர்.

19.07.2019 அன்று தமிழக சுகாதாரத் துறையின் அறிவிப்பாக டாக்டர் முத்துலெட்சுமி ரெட்டி மகப்பேறு திட்டத்தை சரியாக பதிவு ஏற்றாத கிராம சுகாதார செவிலியர்களின் ஊதியம் பிடித்தம் செய்யப்படும் என்ற ஊடக செய்தி அறிவிப்பு கிராம சுகாதார செவிலியர்களின் மத்தியில் கடும் மன அழுத்தத்தையும், மன உளைச்சலையும் ஏற்படுத்தி உள்ளது. இந்த அறிவிப்பை திரும்ப பெற வேண்டும் என்றும், இந்த அறிவிப்புக்கு தமிழ்நாடு கிராம சுகாதார செவிலியர் சங்கத்தின் மாநில செயற்குழு கண்டனத்தை தெரிவித்துக் கொள்கிறது.

2. கடந்த 2018 அக்டோபர் மாதத்தில் நடைபெற்ற பணியிட மாறுதல் கலந்தாய்வு மூலம் பணியிட மாறுதல் பெற்ற கிராம சுகாதார செவிலியர்களை உடனடியாக பணியிலிருந்து விடுவித்திட சம்பந்தப்பட்ட துணை இயக்குநர்களுக்கு உரிய அறிவுரைகளை வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும்

3. PICME பதிவில் உள்ள குளறுபடிகளை சரிசெய்து மக்கள் எளிமையாக பயன் பெற சங்கத்தின் சார்பில் ஏற்கனவே முன்வைத்த ஆலோசனைகளை பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ள வேண்டும்.

4. காலியாக உள்ள கிராம சுகாதார செவிலியர் பணியிடங்களை உடனடியாக நிரப்ப வேண்டும்.

5. மாநிலம் முழுவதும் அதிகாரிகளின் அச்சுறுத்தல், பழி வாங்கும் நோக்கத்தோடு செயல்படுவது மற்றும் மாலை 5 மணிக்கு மேல் ஆய்வுக் கூட்டம் நடத்துவது ஆகியவை முற்றிலும் தவிர்க்கப்பட வேண்டும்.

மேற்கண்ட கோரிக்கைகளை வலியுறுத்தி 29.07.2019 திங்கட்கிழமை காலை சென்னை, தேனாம்பேட்டை, டிஎம்எஸ் வளாகத்தில் அமைந்துள்ள பொது சுகாதாரத் துறை இயக்குநர் அலுவலகம் முன்பு காலை 11 மணியளவில் 600-க்கும் மேற்பட்ட செவிலியர்கள் வெண் சீருடையில் திரண்டு பெருந்திரள் முறையீடு நடைபெற்றது.

இந்நிகழ்வுக்கு தமிழ்நாடு கிராம சுகாதார செவிலியர் சங்கத்தின் மாநிலத் தலைவர் சி.பரமேஸ்வரி தலைமையேற்றார். பொதுச் செயலாளர் ஆர்.பாண்டியம்மாள் விளக்கவுரையாற்றினார். தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் மாநிலச் செயலாளர் சி.ஆர்.ராஜ்குமார் துவக்கி வைத்தார். அரசு ஊழியர் சங்க வடசென்னை மாவட்டச் செயலாளர் ஜெ.பட்டாபி, தென் சென்னை மாவட்டத் தலைவர் டேனியல் ஜெய்சிங், மகளிர் துணைக் குழு மாநில அமைப்பாளர் என்.மணிமாலா, சத்துணவு ஊழியர் சங்க மாநிலத் தலைவர் ப.சுந்தரம்மாள் ஆகியோர் வாழ்த்தி பேசினர். தமிழ்நாடு அரசு ஊழியர் சங்க பொதுச் செயலாளர் மு.அன்பரசு நிறைவுரையாற்றினார். மாநிலப் பொருளாளர் பி.செந்தாமலர் நன்றி கூறினார்.

இறுதியில் நோய் தடுப்பு மருத்துவம் மற்றும் பொது சுகாதாரத் துறை இயக்குநர், சங்க நிர்வாகிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தியதன் விளைவாக கோரிக்கைகள் நிறைவேற்றப்பட்டு பின்னர் இதற்கான உத்தரவுகள் பிறப்பிக்கப்படும என உறுதியளித்தனர். ❖

# வாசிப்பை நேசிப்போம் - விரல் நுனியில் கசியும் தீ

**முனைவர் மதுரை சுகி**

உண்மையிலே அனைவர் விரல் நுனியிலும் அநீதிக்கு எதிராக, சமூக அவலங்களுக்கு எதிராக, தீ கசியத் தான் செய்கிறது... ஆனால் அது யாருக்கும் தெரியாமல் அணைந்து போகிறதா... அக்கினி ஜுவாலையாகி அநீதிகளை சுட்டெரிக்கிறதா என்பது தான் விடை தெரியாத கேள்வி..

எரியும் தீயை வளர்க்காமல் நாட்டில் ஆயிரம் நடக்கும் அதை கேட்க நீ யார் பேசாமல் கண்டும் காணாமல் போவியா..

இருந்த இடம் தெரியாமல் இருந்துட்டு போவியா...அதவிட்டுப்புட்டு என்ற அற்புதமான ஆலோசனை எல்லா இடங்களிலும் இருந்தும் வரும் அத்தோடு அந்த தீ அணைந்து போகும்...

ஆனால் இந்த கதை மாந்தர்களில்
அப்படிப்பட்ட பலர் இருந்தாலும்
எரியும் தீயாய் ஒரு சிலர்
படைக்கப்பட்டிருக்கிறார்கள்..

கதையின் கதாநாயகியாக வலம் வரும் ( பலர் வந்தாலும் இவர் மட்டுமே மனதில் நிற்கிறார்) ஈசு என்ற ஈசுவரி அற்புதமான படைப்பு...

சாதியத்தின் ஆதிக்கத்திற்கு எதிராக
பாலியல் வன்கொடுமைக்கெதிராக
இயற்கை வளச்சுரண்டலுக்கு எதிராக

வெகுண்டெழுகிறார். பெண்கள் நீதிக்கு ஆதரவாய் பாலியல் வன்கொடுமைக்கு எதிராய் சாதியத்தின் ஆதிக்கத்திற்கு எதிராய் நிற்க வேண்டும் என்றால் சுயசார்பு அவசியம் என்ற ஆசிரியரின்ஆணித்தரமான பதிவு ஆதர்சனமானது.

எனக்கு எதை எழுதுவது எதை விடுவது என்று தெரியவில்லை.201 பக்கத்தையும் மீண்டும் எழுதுவதா...

ஆதிராவிடர் வகுப்பு நண்பனின் பைக்கில் வந்ததற்காக தன்னை விடுத்து, தன்னை ஏற்றி வந்தவனை செருப்பால் அடிக்கும் அண்ணன், அதை யாரிடமும் சொல்லாமல் தனக்குள்ளே புதைத்து வைக்கும் சுருளி, அதனை அறிந்து அவனையே தனது மணாளனாய் வரிக்கும் ஈசுவரி.சொந்த அண்ணன் என்றும் பாராது ஆதிக்க பாலியல் வன்கொடுமைக்கெதிராக சாட்சி சொல்லி சொந்த அண்ணனுக்கு தண்டனை பெற்று தரும் தங்கை.ஊரில் இயற்கை எரிவாயு குழாய் அமைப்பதால் ஏற்படும் அவலங்களை எதிர்த்து சிறைக்கு செல்லும் ஒரு கிராமத்து பெண் என்று ஈசுவரி கதை முழுவதும் ஆக்கிரமித்து வீற்றிருக்கும் அற்புதம்...

கிராமத்துக்கே உள்ள மேட்டிமைத்தனத்தோடு ஈசுவரியின் பெண்மையை கேள்விக்குள்ளாக்கும் மோடுமுட்டியை ஊரின் மத்தியில் வைத்து தாக்குவதன் மூலம் பெண்களை தரக்குறைவாக பேசும் கிராமத்துப் பாணி ஆண்களுக்கு சவுக்கடி கொடுத்து உயர்ந்து நிற்கும் பாண்டியம்மாள்...

அதே பாண்டியம்மாளையும் ஈசுவரியையும் ஊர் பொதுப்பிரச்சனை நிமித்தம் கைது செய்து அவர்களை தரக்குறைவாக நடத்தும் காவல் ஆய்வாளர் அறையில் பீமுட்டி அடிக்கும் சீர்திருத்தவாதியாக உயர்ந்து நிற்கிறார்... மோடுமுட்டி..

மொத்தத்தில் இன்றைய உலகமயச்சூழலில் கிளர்ச்சி சாத்தியம் என்பதை தனது நாவல் மூலம் வெளிக்கொணர்ந்து உள்ளார் மதுரை பாலன்...

அனைவரும் படியுங்கள் குறிப்பாக மக்கள் ஜனநாயக புரட்சி சாத்தியம் என்று சொல்லக்கூடிய அனைவரும் அவசியம் படிக்க வேண்டிய நூல்..

இது நாவல் அல்ல ஒரு புரட்சி கருத்துக்கள் கொண்ட எளிய நடையில் எழுதப்பட்டுள்ள தத்துவ விளக்கக் குறிப்பு...

கதையின் மாந்தர்கள் செங்கான், நாட்டாமை, குள்ளராசு, இராமன் , இராயப்பன், இன்ஸ்பெக்டர் சுப்புராஜ், ராயப்பன், வீராயி, மகேசு, சாமியார் என அனைவரும் தத்தம் பங்கேற்பில் மனதில் நிற்கிறார்கள்...

இன்னும் நிறைய இருக்கு ஒரே நாளில் படிக்க தூண்டியது கதையின் சாரமும், சமூக அமைப்பு, மண்ணின் வாசம் எனலாம்.. ஏனெனில் கதை முழுவதும் நேசநேரி, செங்கப்படை, சிவரக்கோட்டை, கரிசல்காளம்பட்டி என நான் மூன்றாண்டுகள் பணி புரிந்த பகுதியை சுற்றி சுற்றி வருகிறது.. ஆங்காங்கே கதையில் ஆபாசம் நிறைய ஆனாலும் கதையில் சொல்லப்பட்ட கருத்துக்களும் கதை மாந்தர்களின் செயல்களும் அவைகளை புறந்தள்ளி..நெடுதுயர்ந்து நிற்கிறது..

நூல் வெளியீடு : பாலன் பதிப்பகம்.
கோடம்பாக்கம்
ஆசிரியர் : மதுரைபாலன்...
தொடர்புக்கு : 8667296634, 9087236321. ❖

# சுதந்திர தினத்தில்...
# தன்னை அறிந்து இன்பமுறு! என் தோழியே!

எழுபத்தி மூன்றாம் ஆண்டு சுதந்திர தினம்
எத்தனையோ தடைகளை உடைத்து பெண் வர்க்கம்
அனைத்து துறையிலும் இன்று கால்பதிப்பு!
குறுகிய நாளில் நடந்தா? இச்சாதனை
ஆனால்... ஆண்டிற்கு ஒருமுறை
அனைத்து தொலைக்காட்சி,... நாளிதழும்
புதியதாய் சொல்வதுபோல் வெட்கமே இன்றி
உதிர்த்திடும் வார்த்தை மகளிர் இட ஒதுக்கீடு
சட்டமன்றத்திலும் நாடாளுமன்றத்திலும் ஒருநாள்
இலவசமாய் தருவதை போல் கூப்பாடு!
ஆண்டிற்கு ஒருமறை அழையா விருந்தாளியாய்
முப்பத்து மூன்று சத இட ஒதுக்கீடு!
எங்கே போகின்றது மற்ற நாளில்!
எங்கள் நாவுகளுக்கு ஏகாதிபத்தியத்தின்
இரும்புக் கதவுகள் தாழ் போட்டு விட்டதால்
முக்கிய கனவுகளோடு பல்லாண்டாய்
நிறுத்தப்படுகிறோம் முச்சந்தியில்!
ஓட்டு பட்டியலில் மட்டும்
உயர்திணையாகும் பெண்கள் சமூகம்
ஆண்டாண்டு காலமாய் அஃறிணை
கொட்டடியில் அமைக்க கட்டாயப் படுத்துகிறோம்!
ஆண்டிற்காண்டு ஒரு நாள் எங்களுக்கு
ஆதரவு தர வரும் ஒருசில அன்னக்காவடிகள்
அவர்களுக்கே ஆதரவு தேடி அடைக்கலமாகின்றன
உண்மைதான்.
வருடந்தோறும் நமது கோரிக்கையை
தலையாங்கமாய் எழுதி தங்க கலசம் பெற்றது
நாளெல்லாம் நாளிதழும்  தொலைக்காட்சியும்!
காலணி முதல் கருவுறும் மையம் வரை
இலவச இணைப்புகளை அள்ளி வீசுகிறது!
ஆஃபர் சொல்லியே ஆளை கொல்கிறது!
எங்களுக்கு வரும் இட ஒதுக்கீட்டு மசோதாவும்
கர்நாடகத்தில் இருந்து வரும் காவிரி நீரும்
சரியாய் வந்ததாய் சரித்திரம் உண்டோ!
எண்ணிப்பார் தோழியே.. அதனால்
முதலில் உன்னை மாற்றுதல் வேண்டும்
என்பதை நீ உணர்வாயா?
பல அமைப்புகள் பலகட்ட போராட்டம்
பல படிகள் ஏறித்தான் வந்தோம் பல்லாண்டாய்
அத்தனை வாய்களும் சிரித்துக் கொண்டே
செல்கின்றது இன்று போய் நாளை வா
பிறகு சுகம் காணும் சராசரி அரசியல்வாதிகளாய்
உறுத்தலின்றி வாழ்பவர்களுக்கு எப்படி தெரியும்
மகளிர் ஒதுக்கீட்டின் நன்னெறி!
சரிபாதியாய் திகழும் இந்நாட்டின்
பெண்களை தெருவில் நிற்கவைத்துவிட்டு
பெண்களை மீண்டும் அடுப்படிக்கே
அனுப்பி வைக்கும் அனைத்து சட்டத்தையும்
கூச்சமின்றி நிறைவேற்றத் துடிக்கும்
உங்களுக்கு!
தேசிய கீதமென்று ஒன்று
தேவைதானா?
வரம்பிட்டு கொள்ளும் வாழ்க்கை முறையை
தகர்க்காமல் வருமா?... 33 சதம் இட ஒதுக்கீடு?
எங்களுக்கு உண்டான விருந்தில் மட்டும் விசபானம்
அடுக்கு மாடிகளுக்குள் மட்டும் அமுத பானமா?
ஊனமாய் புலம்கின்ற ஒரு வர்க்கத்தின் கரங்கள்
உணர்ச்சிப் பிழம்பாய் சிவந்து பெறுவோம்
கோரிக்கையை!
ஆகையால் தோழியே!
சுதந்திர தினத்தில்...
தன்னையறிந்து இன்பமுறு என் தோழியே..!

**எஸ்.தமிழ்ச்செல்வி**

Printed and Published by M. ANBARASU on behalf of Tamil Nadu Government Employees Association, at No.48, New No.46, Car Street, Triplicane, Chennai 600005 and Printed at Chennai Offset Printers, 19/1 & 21/2, Kithabath Khan Bhagadur Street, Ellies Road, Anna Salai, Chennai 600002, Editor: M. SUBRAMANIAN . Phone: 28441286
E-mail: arasuoozhiyar@gmail.com